Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 06 திங்கட்கிழமை (22.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 356

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## நல்லிணக்க முனைப்புகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு

### பிரிட்டன் அறிவிப்பு

இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என பிரித்தானியா அறிவித்துள்ளது.

சமாதானம் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் நன்மையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் லவுரா டேவிஸ் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

சமாதானம் பல்வேறு மேலதிக நன்மைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் [illegible]வித்துள்ளார்.

மனித [illegible]மை, ஜனநாயகம் மற்றும் ந[illegible]ணக்கம் போன்ற துறைகள[illegible] இலங்கைக்கு தொடர்ச்சி[illegible] ஆதரவளிக்கப்படும் என [illegible] குறிப்பிட்டுள்ளார்.

சமா[illegible]ம் அனைத்து மக்களினதும் உரிமையாகும் என

(19) ஆம் பக்கம் பார்க்க...

## கைதாகும் இந்திய மீனவரின் மீன்களை விற்று பாதிக்கப்பட்ட இலங்கை மீனவருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்



### அமைச்சர் டக்ளஸ் அமைச்சரவையில் கோரிக்கை

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும்போது அவர்களது கைவசம் இருக்கும் மீன்கள் காலவரையறையின்றி காத்திருக்க வேண்டியிருப்பதால் அவை பழுதடைந்து வருகின்றன.

ஆகவே அம் மீன்களை நீதிமன்ற உத்தரவுடன் உடனடியாகவே சந்தைப்படுத்தி அதிலிருந்து பெறும் நிதியை பாதிக்கப்பட்ட இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாய

(19) ஆம் பக்கம் பார்க்க...

# தேசிய ரீதியான தேர்தலை எதிர்கொள்வதற்கு தயார்



## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு தேசிய ரீதியான தேர்தலையும் எதிர்நோக்கக்கூடிய வாக்கு வங்கி தமக்கிருப்பதாக நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

வழமையான மாகாண சபைத் தேர்தலில் பதிவாகின்ற வாக்குகளை விட இம்முறை தேர்தலில் கூடுதலான விகிதாசாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## 24 வருடங்களின் பின்னர் யாழ்.வந்தது 'யாழ்தேவி'



24 வருடங்களின் பின்னர் யாழ்தேவி ரயில் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தடைந்தது. அறிவிக்கப்பட்டபடி பரீட்சார்த்தமாக நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதை நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையாததால் அறிவிக்கப்பட்டபடி ரயில் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையில்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஊவா மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது அரசாங்கம்

### எனினும் வாக்கு வங்கியில் வீழ்ச்சி

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் மீளவும் வெற்றி பெற்றுள்ள போதிலும் அதன் வாக்கு வங்கியில் கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனினும், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாணசபைக்குரிய 34 ஆசனங்களில் 2 போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 19 ஆசனங்களை ஆளுங் கட்சி வென்றுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 51 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 40 வீதமான வாக்குகளுடன் 13 ஆசனங்களை வென்றுள்ளது.


ஏனைய இரண்டு ஆசனங்களையும் ஜே.வி.பி. பெற்றுள்ளது.

2009 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் படி, 72.32 வீதமான வாக்குகளை வென்றிருந்த அரசாங்கக் கூட்டணி 25 ஆசனங்களை வென்றிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி 22.32

(19) ஆம் பக்கம் பார்க்க...

## விசேட இணையத்தளத்தை ஆரம்பித்தார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ஜனாதிபதியும், இலங்கையும் கொண்டுள்ள நடவடிக்கைகள், தொடர்பாடல்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விசேட இணையத் தள


(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள்

### அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் விசாரணைகள் மற்றும் அதற்கான பரிந்துரை அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்க உள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க...




## மக்களுக்கான உதவிகளை நிறையவே செய்திருக்கலாம்

### ஒத்துக்கொள்கிறார் சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களுக்கான உதவிகளை அதிகமாகச் செய்திருக்கலாமென ஆதங்கப்பட்டுள்ளார் மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம்.

வடக்கு மாகாண சபையின் ஓராண்டு பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்தமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

(19) ஆம் பக்கம் பார்க்க...

# சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் சமாதான பேரணி



(யாழ்ப்பாணம்)

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டிலான சமாதான ஊர்வலத்தில் பெருமளவானவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு மணிக்கூட்டு வீதியிலிருந்து இந்த சமாதானப் பேரணி ஆரம்பமாகியது.

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து இந்தப் பேரணியை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து பேரணி யாழ். மணிக்கூட்டு வீதியூடாக வைத்தியசாலை வீதியை அடைந்து அங்கிருந்து சத்திரத்துச் சந்தி வழியாக காங்கேசன்துறை வீதியை அடைந்து அங்கிருந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தது.

பாடசாலை மாணவர்களது 'பாண்ட்' வாத்தியம் முழங்க மாணவர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் அணிவகுத்து இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டதுடன், படையினரது துவிச்சக்கரவண்டி அணியும் ஆட்டோ உரிமையாளர்களும் ஆட்டோக்களுடன் அணிவகுத்து கலந்துகொண்டதுடன் இராணுவ மற்றும் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் அணிகளும் இந்த ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

ஊர்வலம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்ததும் அங்கு பாடசாலை மாணவர்களது 'பாண்ட்' வாத்திய இசை நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து சமயத் தலைவர்கள், சர்வதேச சமாதானத்தை வலியுறுத்தும் செய்தியை வாசித்துக் காண்பித்தனர். தொடர்ந்து 'பாண்ட்' வாத்திய மாணவர்களுக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா பரிசில்களையும், பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தார். இறுதியாக தேசியகீதம் இசைக்கப்பட்டதுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்து இந்த சமாதான ஊர்வலத்தில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. (பா,25)

# பொங்கல் மண்டப திறப்பு விழா



சாவகச்சேரி, நுணாவில் மேற்கு விளைவேலி" மருதடி விநாயகர் ஆலய பொங்கல் மண்டப திறப்பு விழா இன்று இடம்பெறுகின்றது.

நண்பகல் 11.00 மணிக்கு இவ்விழா விமர்சையாக இடம்பெறுகின்றது. 8 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இப்பொங்கல் மண்டப திறப்பு விழாவைத் தொடர்ந்து மருதடியானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

கல்வயலைச் சேர்ந்த கா. வேதநாயகம் குடும்பத்தினரால் இம்மண்டபம் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. (இ)

# முகத்துவாரம் வெளிச்சவீடு புனரமைப்பு பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யுத்தகால நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்து போயிருந்த முகத்துவாரம் வெளிச்சவீடு புனரமைக்கும் வேலைகள் தற்சமயம் நடைபெற்றுவருவதாக முன்னாள் யாழ். மாநகர உதவி முதல்வர் செல்வராசா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறைக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட பகுதியில் கடலின் நடுவில் அமைந்துள்ள இந்த முகத்துவாரம் வெளிச்சவீட்டை புனரமைத்துத் தரும்படி அப்பகுதி மீனவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, அமைச்சர் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் பேச்சுக்கள் நடத்தியதன் பலனாக இந்த வெளிச்சவீடு தற்சமயம் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின்கீழ் இந்த வெளிச்சவீடு புனரமைப்பு உள்ளடங்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரவு வேளைகளில் கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் தொழில் முடித்து தமது பகுதிகளுக்கு திரும்புவதற்கு வசதியாக இந்த வெளிச்சவீடு புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# குளிர்களி விற்பனை நிலையம் உடனடியாக மூட உத்தரவு

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த குளிர்களி விற்பனை நிலையமொன்று நீதிமன்ற உத்தரவுக்கமைய மூடப்பட்டுள்ளதாக, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.விமலகுமார் நேற்று தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த இரண்டு குளிர்களி விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதவான் ஒரு விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் அந்த குளிர்களி விற்பனை நிலையத்தை சீர்செய்யும்படியும் உத்தரவிட்டார்.

அத்துடன், மற்றைய குளிர்களி விற்பனை நிலையம் மோசமான முறையில் சுகாதார சீர்கேடான முறையில் இயங்கி வந்தமையால் அதனை உடனடியாக மூடும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

# அத்தியார் இந்துவில் ஸ்தாபகர் தினம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் தினம் இன்று கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது.

கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்தாபகரது சிலைக்கு மலர் மாலை அணிவதோடு, நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்படும்.

கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் கலந்து கொள்வர். ஸ்தாபகர் குடும்பத்தினரால் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3727)


# விளக்கமறியல் நீடிப்பு

குடத்தனை மேற்கில் மகனைக் கடத்துவதாக மிரட்டி ஒரு குடும்பத்திடம் கப்பம் பெற்ற சந்தேகநபர்கள் ஐவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மகனைக் கடத்தப்போவதாக மிரட்டி 44 ஆயிரம் ரூபா கப்பமாக பெற்ற பிரஸ்தாப குழு, மீண்டும் பணம் கேட்டு மிரட்டிய போது சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து அக்குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் சந்தேகநபர்களை 19 ஆம் திகதிவரை விளககமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்ட நிலையில் கடந்த வெள்ளியன்று சந்தேகநபர்களுக்கான விளக்கமறியல் 29 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (18)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2565 திகதி 20-09-2014

ஆங்கில எழுத்து: A

வெற்றி எண்கள்: 01 22 52 70 போனஸ் இல: 48

ஜக்பொட் பரிசு ரூ.20,607,075/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 206826 | 20/- | 4,136,520/- |
| 2 இல | 14624 | 100/- | 1,462,400/- |
| 3 இல | 319 | 1,000/- | 319,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8328 | 40/- | 333,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 605 | 1,000/- | 605,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,607,075/- | - |
| 1 இல + போனஸ் இல | 9823 | 100/- | 982,300/- |
| 2 இல + போனஸ் இல | 460 | 500/- | 230,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 395 | 200/- | 79,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 241411 | | 9,688,340/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.09.24 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 21,170,650/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 தொ.பே: 2333546/7

(C/3504)



## கிளிநொச்சி நகரசபை, கண்டாவளை பிரதேச சபை, கரைச்சி பிரதேச சபை உருவாக்கம்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபையானது தற்போது கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவு, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபையினை பிரித்து பரந்தன் நகரப்பகுதியை அண்மித்த பிரதேசத்தை விட ஏனைய கண்டாவளை பிரதேசத்தினை கண்டாவளை பிரதேச சபையாகவும், கிளிநொச்சி நகரம், பரந்தன் நகரம் ஆகியவற்றை அண்மித்த பகுதியை கிளிநொச்சி நகர சபையாகவும், மிகுதியாக உள்ள பகுதியை கரைச்சி பிரதேச சபையாகவும் உருவாக்குவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும் சமூக அமைப்புக்களிடமிருந்தும் அபிப்பிராயங்கள் கோரப்படுகின்றன. அபிப்பிராயங்களை எழுத்துருவில் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிளிநொச்சி நகர சபை, கண்டாவளை பிரதேச சபை உருவாக்கம்" எனக் குறிப்பிட்டு இரு கிழமைக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி. றூ.கேதீஸ்வரன்
கிளிநொச்சி நகரசபை, கண்டாவளை பிரதேச சபை உருவாக்கல் குழுத் தலைவரும்,
அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி.

(C/3519)

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம்

## ஹெல்தி லங்கா வேலைத்திட்ட அலுவலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் மதுபாவனை மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனைக் குறைப்பதற்காக மக்கள் மத்தியில் அதுவிடயம் தொடர்பில் தெளிவுபடுத்தி மது பாவனை, போதைப்பொருள் பாவனை அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கான உத்தியாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக ஹெல்தி லங்கா வேலைத்திட்ட அலுவலர் தெய்வேந்திரன் உதயரூபன் தெரிவித்தார்.

ஹெல்தி லங்கா மற்றும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸால் ஏற்பாடு செய்யப்பட்ட மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான மக்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

போரின் பின்னரான காலப்பகுதியில் எமது சமூகம் மதுசாரப் பாவனைக்குள் மூழ்கி மீண்டும் ஒரு அநீதியான எதிர்கால சமூகத்திற்குள் நுழைந்துவிட்டது. அதுமட்டுமல்லாது அடிமைத்தனமான யுக்தியை பரப்பும் நோக்குடன் மதுபானசாலைகள் சில முயற்சிக்கின்றன. எனவே மது பானசாலைகளினால் மக்கள் தம்மை மதுவிற்கு அடிமைப்படுத்தி எதிர் காலத்தை பாழாக்கிவிடுகின்றனர்.

எனவே இவ்வாறாக இந்த மது. மற்றும் போதைப்பொருள் அடிமைத் தனத்திலிருந்து முக்கியமாக இளைஞர்கள் விடுதலை பெற்று எதிர்கால சமூகத்தை நல்ல வழியில் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (48)

# கடமையாற்றுவதில் தடங்கல் சிரமப்படும் பட்டதாரி அலுவலர்கள்

பட்டதாரிப் பயிலுநர்களாக கடமையாற்றி கடந்த வருடம் உதவி அரச அதிபர் பணிமனை மற்றும் அரச திணைக்களங்களில் நிரந்தர நியமனம் பெற்ற பட்டதாரிகள் சிலர் குறித்த இடங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களினால் தமது பணியினை செய்யமுடியாத அவல நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் மற்றும் பொறுப்பு வாய்ந்த பதவி நிலைகளுக்கு நிரந்தர நியமனம் செய்யப்பட்டனர்.

எனினும் நீண்ட காலமாக முகாமைத்துவ் உதவியாளர்களாக சேவையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் தமது சேவைக்கு ஒத்துழைப்பு வழங்காமலும் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட வேலைகளை செய்வதற்கு இடையூறாகவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஊழியர் அனைவரினதும் நலன் காக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது. (66)


# க.பொ.த.சாதாரண மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்குரிய விசேட வகுப்புக்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றன. ஊவா வெல்லச பல்கலைக் கழக மாணவர்களின் ஒத்துழைப்புடன் இந்த விசேட வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுக்கான இந்த விசேட வகுப் புக்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள ஒழுங்கு படுத்தப்பட்ட பாடசாலைகளில் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள இறுதிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள சாதார்ணதர மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கிலேயே இந்த விசேட வகுப்புக்கள் ஏற்பாடு. செய்யப்பட்டிருக்கிறது. (10)

# யாழில் திரட்டப்படுகிறது ஓய்வூதியர்களின் விபரங்கள்

ஓய்வூதியர்களின் சுயவிபரங்கள் திரட்டும் நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை அனைத்து பிரதேச செயலகங்களும் இப்போது மேற்கொண்டு வருகின்றன. கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பிரத்தியேகமான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு இந்த விபரம் திரட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓய்வூதியர்களின் விபரங்களுடன் அவர்களின் வர்ணப்புகைப்படமும் சேகரிக்கப்பட்டுவருகிறது. (க)



யாழ். பிரதான வீதியிலுள்ள தண்ணீர் தாங்கியில் குளவிகள் கூடுகட்டியுள்ளன. இதனால் அவ்வீதியால் செல்வோர் அச்சத்துடன் செல்வதை காணமுடிகிறது. (இ)

# உங்களை நம்பி வாக்குப்போட்ட அரச அதிகாரிகளையே சந்தேகிப்பதா?




'எங்கள் தங்கம் சிவசிவா' விக்கினேஸ்வரன் தடாலடியாக அரச உயர் அதிகாரிகளையுமல்லோ தாக்கியிருக்கிறார்.

வடக்கு மாகாணசபையை வலு புளுகத்தோட பொறுப்பேற்றவருக்கு அதை ஒழுங்காக நடத்தத் தெரியேல்ல.

வடமாகாண சபையின்ரை சீத்துவக்கேட்டை மெல்ல மெல்லமாக உதயன் பத்திரிகையே பகிடி பண்ணத் தொடங்க 'எங்கள் தங்கம் சிவசிவா' விக்கினேஸ்வரன் அரச எதிர்ப்புப் பீரங்கியை அமோகமாக அடிக்கத் தொடங்கினார்.

இப்ப எங்க போனாலும் அரசாங்கத்தைப் படு மோசமாகத் திட்டித்தீர்த்துத் தன்ரை பக்கத்துப் பிழைகளையும் பொட்டுக்கேடுகளையும் அப்பிடியே மறைச்சுப்போடுறார்.

என்னதான் கெட்டிக்காரனாக இருந்தாலும் புளுகு எண்டதும் பொய் எண்டதும் எட்டு நாளைக்குத் தாக்குப்பிடிக்காது எண்ட மாதிரி முதலமைச்சரின் புலுடாக்களைச் சனங்கள் கண்டு பிடிச்சிட்டுதுகள்.

வடக்கு மாகாணசபையை ஏன் வலுவாக இயக்க முடியேல்ல எண்ட கேள்வி எல்லா மட்டங்களிலயும் எழும்பத் தொடங்கீட்டுது.

வடக்குமாகாண சபையில போட்டி போடேக்கையும் வெல்லும்போதும் இவைக்கு ஒரு விசயம் விளங்கியிருக்க வேணும். அரசாங்கத்துக்கு எதிர்பக்கத்தில நிண்டு எதிராக மாகாணசபையை வெண்டு எடுக்கேக்க சவால்கஞும் இருக்கும். அந்தச் சவால்களை எல்லாம் வெட்டியாடித்தான் ஆட்சியை நடத்தோணும். அப்பிடி நடத்திக் காட்டுவினம் எண்டு எண்ணித்தானே உங்களுக்குச் சனங்கள் வாக்குப் போட்டதுகள்.

இப்பியிருக்கேக்க, இப்பதான் ஏதோ அரசாங்கம் எதிர்ப்பைக்காட்டுது. எல்லாத்திலயும் மூக்கை நுழைக்குது எண்டமாதிரிப் புதுக்கதை கதைச்சால், அதை ஏற்றுக்கொள்ள ஆர்தான் தயார்?

இதாலதான் இப்ப தட்டை மாத்திப்போடுறார் முதலமைச்சர்.

மாகாணசபையின்ரை நடவடிக்கைகள் ஏறக்குறைய தோல்வியைச் சந்திச்சுக் கொண்டிருக்கேக்கை, சனங்களின்ரை நம்பிக்கைகள் எல்லாம் புஸ் வாணமாகிக் கொண்டிருக்கேக்கைதான் இவர் சொல்லிறார், இதுக்கெல்லாம் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கிறதுதான் காரணம் எண்டு.

என்ன மாதிரியான பொய் இது?

'முருகா... கதிர்காமக்கந்தா.... ஆனைமுகத்தானே... அந்தோனியாரே... சிவனே... அல்லாவே.... மடுமாதாவே...

இதை எப்பிடித்தான் பொறுக்கிறதோ....!

மாகாணசபைத்தேர்தல், பாராளுமன்றத்தேர்தல், உள்ளூராட்சி மன்றத்தேர்தல் எண்டு வந்த எல்லாத் தேர்தல்களிலயும் 90 வீதமான அரசாங்க உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் தமிழ்க்கூட்டமைப்புக்குத்தான் வாக்குப்போட்டவை எண்டது உலகம் அறிஞ்ச சேதி.

ஏன் மாகாணசபைத் தேர்தலில விக்கியரை அதிகமாக நம்பினதும் ஆதரிச்சதும் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்மாருந்தான்.

விக்கியர் ஒரு படிச்ச மனிசன், கொஞ்சம் நிதானமாகக் கதைப்பார். மற்ற ஆக்களைப்போல வெடிவசனம் எல்லாம் பேச மாட்டார். பிலிம் பண்ண மாட்டார். கொஞ்சம் யதார்த்தவாதி எண்ட மாதிரியான எண்ணம் பலரிட்டயும் இருந்தது.

ஆனால், இந்த எண்ணத்திலயும் சனங்களின்ரை நம்பிக்கையிலயும் மண்ணள்ளிப்போட்ட விக்கியர், நம்பி வாக்குப்போட்ட அரச அதிகாரிகளிலயே கை வைச்சதுதான் பிரச்சினையாகியிருக்கு.

தாங்கள் மட்டும் வாக்குப் போட்டதோட நிக்காமல் சட்டத்துக்குக் கீழால சுழிச்சு விளையாடி. ஒளிச்சு மறைச்சு எவ்வளவோ கஸ்ரப்பட்டு சதாரண சனங்களுக்கே மண்டையைக் கழுவி கூட்டமைப்பையும் விக்கியரையும் வெற்றி அடைய வைச்ச குற்றத்துக்காக விக்கியர் செய்யிற வேலையா இது எண்டு எல்லாரும் நெருப்பாக நிக்கினம்.

இது உண்மையில விக்கியரை நம்பிய அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் அவமதிக்கிற ஒரு செயல்தான்.

பாதிக்கப்பட்ட சனங்களைப் பற்றிக் கரிசனம் எடுப்பினம். மாகாணசபையை நல்ல முறையில ஆட்சி செய்வினம். சட்டம் தெரிஞ்ச – சட்டத்தைக் கரைச்சுக் குடிச்ச ஆள் எண்டபடியால மாகாணசபையில இருக்கிற புடுங்குப்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளுவார் நீதியரசர். அரசாங்கத்தோட சட்டரீதியாக அணுகி சில காரியங்களை வெண்டு எடுப்பார் எண்டெல்லாம் நம்பியிருந்தவைக்கு இப்பிடி மாறி அடிப்பார் எண்டு கனபேர் நம்பேல்ல.

ஆனால், அரசியல் எண்டால் இப்பிடித்தான்.... அதிலயும் கள்ளத் தமிழ்த்தேசிய அரசியல் எண்டால் இப்பிடித்தான்... காதில பூவைக்கிற சங்கதிதான் எண்டு வடிவாகக் காட்டிப்போட்டார் விக்கியர்.

படிச்ச மனிசன், நல்ல மனிசன், கடவுளுக்குப் பயந்த மனிசன் எண்டெல்லாம் நம்பி மோசம் போட்டம் எண்டு வாக்குப்போட்ட அதிகாரிகளே... புலம்பிற நிலைமையில கொண்டு வந்து விட்டிருக்கிறார் முதலமைச்சர்.

வாழ்க விக்கியர்... இதுதான் செய்நன்றி மாறவாத பண்பு... நல்ல தமிழர் நீங்கள். வாழ்க உங்கள் கள்ளத்தேசியப் பொய்வேச நாடகம்...

இப்பிடி எல்லாரையும் நடுத்தெருவில விடுகிறதுக்குத்தான் உங்களுக்கு வசதிகளும் வாகனங்களும் கைநிறையக் காசும் தரப்படுகுது என்கிறார் உங்களுக்கு வாக்குப்போட்ட வாத்தியார் ஒருத்தர்.

நீ எந்த மாற்றத்தை விரும்புகிறாயோ? அந்த மாற்றத்தை உன்னில் இருந்தே தொடங்கு. - அண்ணல் காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அகிம்சைப்போர் வெல்லும்!

இலங்கை அரசுக்கான தனது மூன்று மாத காலக்கெடுவை மீண்டும் வலியுறுத்தியுள்ளார் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தையை மூன்றுமாதங்களுக்குள் நடத்தாவிட்டால் ஜனவரியில் அகிம்சைப் போர் வெடித்தே தீரும் என்று நேற்று முன்தினம் நீர்வேலியில் பேசும் போதும் அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவர்.

அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல்களையும் கடும் எச்சரிக்கைகளையும் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்ற பயமுறுத்தல்களையும் அவ்வப்போது அறிக்கைகளாகவும் மேடை முழக்கங்களாகவும் இந்தத் தமிழ்த் தலைவர்கள் இதற்கு முன்னரும் விடுத்திருக்கிறார்கள் தான்.

அரசாங்கத் தரப்பினரோ, இதற்கெல்லாம் பயந்து உடனே இவர்களைக் கூப்பிட்டுப் பேசியதாகச் சரித்திரமில்லை. நடுநடுங்கியதாகக் காண்பித்ததுமில்லை. இவர்கள் ஏதோ ஜோக்கடிக்கிறார்கள் என்பது போலச் சிரித்துவிட்டு அவர்கள் தங்கள் பாணியிலேயே செயற்பட்டு வருகிறார்கள்.

அறிக்கைகளிலும் மேடைகளிலும் ஆக்ரோசம் காட்டும் தமிழ்த் தலைவர்களும் அரசாங்கத்திற்குத் தாங்கள் குறிப்பிட்டது போல கடுமையான விளைவுகள் எதுவும் நிகழாதபோதும் அதுபற்றி அலட்டிக்கொள்ளாமல், பிறகு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைச் சந்திக்கும்போது சிரித்துக் கலகலப்பாகப் பேசிவருகிறார்கள்.

மேலதிகமாக, தங்களுக்கான வாகன வசதிகள், பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் உதவிகள், உறவினர்களுக்கான வெளிநாட்டுத் தூதரக வேலைவாய்ப்புகள் போன்ற இன்னோரன்ன அற்ப சலுகைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்போது பவ்வியமும் குழைவுமாக பாராளுமன்ற கொரிடோர்களில் காட்சி தருகிறார்கள்.

தமிழரசுக்காரர்களின் இதற்கு முந்திய அகிம்சைப் போராட்டங்களெல்லாம் ஒரு நேர உண்ணாவிரதத்துடனோ அல்லது ஒருமணி நேர பஸ்நிலைய ஆர்ப்பாட்டப் போட்டோ பிடிப்புகளுடனோ முடிந்து விடுவதையே நாம் பார்த்துவந்திருக்கிறோம்.

அரசாங்கமும், இவர்கள் தங்களுடைய வார்த்தைகளில் காட்டும் ஆக்ரோசமெல்லாம் இவர்களுக்கு வாக்குப்போட்ட மக்களுக்கு உச்சுக் காட்டவே என்பதை விளங்கிக் கொண்டவர்கள் போலவே இருந்து விடுகிறார்கள்.

இவர்களும், பாராளுமன்றத்திலேயே "எனது தலைவர் பிரபாகரன் தான்" என்றுகூடப் பேசிவிட்டு வருகிறார்கள். "நாற்பதினாயிரம் சவப் பெட்டிகளில் ராணுவத்தினரை அனுப்புவோம்" என்று அனல் கக்கியவரும் "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்று சாதாரணமாகப் பவனிவர முடிகிறது.

ஆனால், இம்முறை அரசுக்கு காலக்கெடு விதித்திருக்கும் தமிழரசுத் தலைவர் மாவையின் சூளுரை வித்தியாசமானது என்று நாங்கள் நம்பத்தான் வேண்டும். ஏனெனில், பொத்தாம் பொதுவான அகிம்சைப் போராட்ட அறிவிப்பாக இது இல்லை.

வடக்கு கிழக்கு இணைந்த இறைமை உள்ள ஓர் அரசு கிட்டும் வரை அகிம்சைப்போர் தொடர்ச்சியாக நடைபெறும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார்.

இடையிலே கைவிட்டுவிடாமல் தொடர்ச்சியாக நடத்தப்படும் எந்தப் போராட்டத்திலும் ஒரு முடிவு வந்தே தீரும் என்பதால், இம்முறை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்து தப்பிவிட முடியாது.

தொடர்ச்சியான உண்ணாவிரதத்தில் தமிழ்த் தலைவர்கள் சாகும் நிலை வரை செல்லும்போது கண்டிப்பாக இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்தெல்லாம் அரசுக்கு கடும் நெருக்குதல் வரும்.

கூடவே இந்தத் தலைவர்களுக்கு வாக்களித்த எண்பது வீதத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகள் உத்தியோகத்தர்களெல்லாம் தங்கள் அரசாங்கப் பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டு தலைவர்களின் அகிம்சைப் போராட்டத்திற்கு ஆதரவாக இறங்குவார்களானால் நிச்சயம் தீர்வொன்று வந்தே தீரும்.

தமிழரசுக் கட்சி அதைச் சாதித்துக் காட்டப் போவதாகத்தான் சூளுரைத்து வருகிறது என்பதால் தமிழ் மக்கள் வரும் ஜனவரியை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கிறார்கள்.

- ஆசிரியர்.

# ஆளும் கட்சியின் வெற்றிக்கு பின்னால் மலையக மக்கள் முன்னணி இருந்தது

## இப்படிச் சொல்கிறார் இராதாகிருஸ்ணன்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஊவா மாகாணசபை தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியில் மலையக மக்கள் முன்னணிக்கும் பாரிய பங்களிப்பு உண்டு என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிதொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் தெரிவித்த அவர்,

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியானது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆனாலும் ஆளும் கட்சியின் பின்னடைவு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய ஒரு காலம் ஏற்பட்டுள்ளது. இந்த வெற்றியில் எமது மலையக மக்கள் முன்னணிக்கு பெரும்பங்குண்டு.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் எமது உறுப்பினர் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு 9,227 வாக்குகளை பெற்று வெற்றிபெற்று ஒரு ஆசனத்தை பெற்றுக் கொண்டார். அந்த வாக்குகள் இன்று ஆளும் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்புக்கு கிடைத்துள்ளன. பதுளை மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்புக்கு மேலதிகமாக 11,348 வாக்குகள் கிடைத்துள்ளன. எனவே, இவ் வெற்றியில் எமது பங்களிப்பும் உண்டு.

இன்றைய விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு என்பவற்றில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கவனம் செலுத்த் வேண்டும் என்பதையும் மக்கள் அரசாங்கத்திற்கு உணர்த்தியுள்ளனர். எனவே, இந்த விடயங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

எமக்கு அமைச்சு பலமோ வேறு எந்த பலமோ இல்லாமல் நாம் இவ்வாறு செயற்பட்டு வருகின்றோம். எமக்கு இருப்பது மக்கள் பலம் மாத்திரமே. இதனை அரசாங்கம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பலஸ்தீனத்துக்கு உதவி வழங்க விசேட செயற்றிட்டம் அமுல்

## ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பலஸ்தீனத்துக்கு உதவியளிக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்றை ஜனாதிபதி அறிவித்துள்ளார். பாலஸ்தீன நிதிநெருக்கடிக்கு உதவும் வகையில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர், மற்றும் சர்வதேச ஊடகப்பிரிவு அண்மையில் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளிவிவகார அமைச்சகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கான பத்திரம் பலஸ்தீன வெளியுறவு அமைச்சகத்தின் ஆசியா, ஆபிரிக்க மற்றும் அவுஸ்ரேலியா துணை தலைவர் ஹானா அபு ஹேக்மகவிடம் எம்.சிராஜ் அகமட்டினால் கையளிக்கப்பட்டது.

இதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் வர்த்தக உடன்பாட்டுக் கொள்கைகள் மேலும் விரிவடையும். கடந்த ஜனவரி மாதம் பலஸ்தீனத்துக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டார், அதன் போது பலஸ்தீனத்தின் நாயகன் என்ற விருது ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு பலஸ்தீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு மாணவர்களுக்கான இலங்கை ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நான்கு பலஸ்தீனிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வருடத்திற்காக 4 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பலஸ்தீனிய மாணவர்கள் தமது தொழில் ரீதியான ஆற்றல்களை வலுப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொழிற்பயிற்சி நிலையம் வழிவகுக்கின்றது.

இதனைத்தொடர்ந்து ஹானா கருத்து தெரிவிக்கையில், இவ்வாறான நிதியுதவியை அன்பளிப்பு செய்த இலங்கை ஜனாதிபதிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதாக கூறினார். மேலும் பலஸ்தீனத்தில் வெளிவருகின்ற "அல் - குட்ஸ்" பத்திரிகையில் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த நிதி பற்றிய செய்தி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சிகளின் கனவுகள் தகர்ந்தன எமது வெற்றிப்பயணம் தொடரும்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் கட்டியெழுப்பிய மாயைகள் தேர்தல் முடிவுகளுடன் உடைத்தெறியப்பட்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னோக்கிய பயணத்தை நிறுத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊவா தேர்தல் முடிவுகளை பார்க்கும் போது எதிர்க்கட்சிகள் கடந்த காலங்களில் கட்டியெழுப்பி வந்த மாயைகள் எல்லாம் உடைத்தெறியப்பட்டுள்ளன.

தீர்மானிக்கும் சக்தி நாமே என ஜே.வி.பி கூறியதுடன் ஜே.வி.பி.யுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இப்படியான பல மயக்கத்தை ஏற்படுத்தும் மாயைகளை எதிர்க்கட்சிகள் கட்டியெழுப்பின.

இவ்வாறான பல நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டாலும் அவர்களால் ஆளும் கட்சியை தோற்கடிக்க முடியவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கத்துடன் நாட்டுக்கு மக்கள் மேற்கொள்ள இருக்கும் சேவைகளின் பயணம் முற்று பெறாது. மேலும் வெற்றிகளை பெற்று முன்னோக்கிச் செல்லும்.

அதற்கான நற்செய்தியாகவே ஊவா தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டதுடன் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றவில்லை. அத்துடன் குறைவான வாக்குகளையே பெற்றது.

மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. எனினும் அந்த கட்சியின் உறுப்பினர்கள் எவரும் தெரிவாகவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.


D.S. Senanayake and SWRD Bandaranaike

# தமிழர்களாகிய நாங்கள் கிட்டத்தட்ட தொடங்கிய அதே இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறோம்

**ஐந்து வருடங்களுக்கு முன்பு நாங்கள் எங்கள் தெரிவுகளை நஷ்டப் படுத்தியதுடன் மீதமுள்ள தெரிவுகளையும் கூட இழந்து நிற்கிறோம், தமிழர்களாகிய நாங்கள் இப்போது எங்கே நிற்கிறோம்? கிட்டத்தட்ட எங்கு நின்றோமோ அதே இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறோம். அரச வன்மம் மற்றும் சமுதாய அலட்சியம் என்பனவற்றால் பல தசாப்தங்களாக ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை திரும்பக் கட்டியெழுப்ப அதிக காலம் தேவைப்படுகிறது.**

## எஸ்.சிவதாசன் கட்டுரையிலிருந்து

தமிழர்கள் எப்போதும் தங்கள் தெரிவுகள் நஷ்டப்படும் வகையில் தாமே சிக்கல்களில் மாட்டிக் கொள்கின்றனரா? என்கிற கேள்விக்கு உரிய பதில் ஆம் என்றால் எவ்வளவு காலமாக நாங்கள் அதைச் செய்து வருகிறோம்?

கிட்டத்தட்ட எட்டு தசாப்தங்களும் மற்றும் அதற்கு மேலான காலமாக என்று சிலர் சொல்லக்கூடும். இது எப்போது ஆரம்பமானது? 1931இல் அரச சபைகளுக்கான தேர்தலுடனும் மற்றும் யாழ்ப்பாணம் அதை புறக்கணித்த போதும்.

அதற்கான முயற்சியையும் ஏற்பாட்டையும் செய்தது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ். அப்போது உருவாகிய மனப்போக்கு நமக்குள் ஊடுருவி தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. நமது எதிர்கால நலன்களுக்காக,..:அதிக வலிமை பெற்றுவிட்ட இந்த கெடுதியான வளர்ச்சியை அறுவை சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தியாவது நீக்க வேண்டும்.

இறுதியாக செப்ரம்பர் 2013இல் நடந்த மாகாணசபை தேர்தல்களில் கூட அவலம் நிறைந்த அதன் தலையை உயர்த்த அது தவறவில்லை. தமிழர்களாகிய நாங்கள், செய்ததையே திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருப்பதை அடையாளம் காணவும் மற்றும் இந்த புறக்கணிப்பு மனப்பான்மையிலிருந்து எங்களை விடுவிக்கவும் மிகப் பெரிய சுயபரிசோதனை முயற்சி ஒன்று அவசியமாகப் படுகிறது.

நாங்கள் எடுத்துள்ள நிலைப்பாட்டையும் மற்றும் அதனால் நாங்கள் பெற்றுள்ள எதிர்மறையான விளைவுகளையும் பற்றி நடுநிலையான பகுப்பாய்வுகளைச் செய்வதுடன் இணைந்து செயற்படவேண்டும்.

அரச சபைக்கான தேர்தல்களைப் புறக்கணிப்பதில் இரண்டு வலிமையான் காரணிகள் ஊக்குவிப்புச் செய்தன. இனவாரியான பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதினால், முன்னைய பிரதிநிதித்துவ முறையுடன் ஒப்பிடுகையில் சபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைவடையும் என்பது பல தமிழர்களின் சினத்தை சம்பாதித்தது.

இந்த சாதகமான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்த இளைஞர் அமைப்புகள் ஒரு அவசர தலைமையை ஏற்படுத்தி நம்பிக்கையான ஒரு அரசியல் முறைப்பாட்டை வெளியிட்டன.

இந்தியாவில், டொனமூர் ஆணைக் குழுவிற்கு பத்து வருடங்களுக்கு முன்பே பிரித்தானியர்களால் படிப்படியாக சுயாட்சி முறையை கொண்டுவருவதற்காக "மொன்ட்டாகு செல்ம்ஸ்போட் சீர்திருத்தம்" அமல்படுத்த முடிவெடுத்ததின் விளைவாக 1919ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டப்படி பகுதி சுய அரசு வழங்கப்பட்டது. பூரண சுதந்திரம் கோரி தீவிரமாக போராடிய இந்தியர்களுக்கு, இது அவர்களைக் கவரக்கூடிய அவர்களது எதிர்பார்ப்பான பூரண சுயராஜ்யத்தை விட வித்தியாசமாக இருந்தது.

யாழ்ப்பாண இளைஞர் அமைப்பு இந்தியாவின் இலட்சியத்துக்கு பதிலாக அதன் இழைகளையே பின்பற்றியிருந்தது. இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் எவ்வளவு பலமானதாக இருந்தது?

1957 ஆண்டுவாக்கில் "இந்தியாவுக்கு சுதந்திரம் மிகவும் விரைவிலேயே கிடைத்துவிட்டது. நாங்கள் எங்கள் சுதந்திரத்துக்காகப் போராடவில்லை. சீனாவை போல ஒரு நீண்ட அணிவகுப்பை நாங்கள் நடத்தியதில்லை" என்று நேரு சொல்லியிருந்தார்.

தமிழர்களாகிய நாங்கள் 1931இக்கு முன்னர் ஒரு முழு சுதந்திரத்துக்கு அருகதைப்பட்டு மற்றும் வெறும் புறக்கணிப்புடன் மட்டும் பிரித்தானியர்கள் அதை வழங்கி விடுவார்கள் என்றா போராடினோம்? இரண்டு வருடங்களுக்குள் புத்திசாலித்தனமற்ற செயலைப் பற்றி உணர்ந்து தமிழர்கள் தேர்தலுக்கும் பிரதிநிதித்துவத்துக்கும் கோரிக்கை எழுப்பினார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை இந்த ஊடுருவும் மனப்பாங்கை பரவலாக அனுமதிப்பது யதார்த்தமான அரசியல் நோக்கமாகுமா?

1931இல் எங்கள் பிரதிநிதியை தெரிவு செய்வதில் நாங்கள் தவறிவிட்டோம்.

எனினும் 1934இல் ஒரு திருத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த வருடம் ஜிஜி பொன்னம்பலம் உட்பட நான்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து 1936இல் நடைபெற்ற இரண்டாவது அரச சபை தேர்தலில் சிங்கள சார்பு அமைச்சர் சபை உருவாக்கப்பட்டது. தமிழர்களும் அதே போல ஏனைய சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்களும் முற்றாக நீக்கப்பட்டிருந்தார்கள். ஆட்சியில் பங்கு கொள்வதை அவர்கள் விரும்பினார்களா அல்லது அவர்களுக்கு அது தேவையாக இருந்ததா அல்லது அதற்காக ஏங்கினார்களா என்பது பற்றி ஒரு தெளிவும் இல்லை.

நாட்டின் முழு ஆட்சிப் பொறுப்பையும் வழி நடத்த சிங்கள சார்பு அமைப்பை கொண்டு வந்ததின் மூலம், தேசிய ஒருங்கிணைப்புக்கான பாலத்தை அமைப்பதற்கான ஒரு வாய்ப்பு பெரும்பான்மை சமூகத்தால் தவறவிடப்பட்டது. சமமான பிரதிநித்துவம் வேண்டி கோரிக்கை எழுப்புவதற்கான ஒரு நம்பிக்கையான வாய்ப்பை சிறுபான்மை சமூகம் பெற்றிருந்தது மற்றும் 1938இல் அதைப்பற்றி ஆளுனர் கல்கட்டிடம் விவாதிக்க ஜிஜி பொன்னம்பலத்தை போன்ற திறமையான பேச்சாளர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார்கள். இருந்தும் அந்த நாள் கைவிட்டுப் போனது.

பிரதமரின் எண்ணம் அல்லது நோக்கம் என்னவாக இருந்தாலும், சுதந்திரத்தின் போது தமிழர்களுக்காக அவர் வழங்கிய இரு அமைச்சுப் பதவிகளை தமிழர்கள் ஏற்கவில்லை. அப்போதும் அதேபோல இப்போதும் தமிழர்கள் ஒரு தடுமாற்றமான நிலையில்தான் உள்ளார்கள்.

தமிழர்களது முடிவுகள் தொடர்பாக அவர்கள் பக்கம். ஒரு தவறும் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? வாசிப்பு அலுப்புத் தட்டும் மற்றும் ஆரோக்கியமற்ற நிலைக்குத் திரும்பும் என்பதால் அனைத்து விடயங்களையும் அலசிப்பார்க்க விரும்பவில்லை.

1960ன் ஜூலை தேர்தல்கள் மூலம் தமிழ் பகுதியினரின் ஒரு புரிந்துணர்வுடன் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 10 அங்கத்துவ மந்திரிசபை தொடர்ந்தது. அப்போதைய வெளிப்படையான அனுமானமும் அதன் பின்னர் எடுக்கப்பட்ட முடிவின்படியும் 4 இருக்கைகள் ஒரு புதிய ஆரம்பத்துக்காக தமிழர் பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும்

எதிர்ப்பு வரக்கூடும் என்பதைக் கருதி, தமிழ் தரப்பின் அதற்கான பதில் நிராகரிப்பாகவே இருந்தது.

தொடர்ந்து, அந்த அரசாங்கத்துக்கு ஆதரவாக இல்லாமல் அதை விமர்சனம் செய்ததால் அந்த அரசாங்கத்துக்குள் இருந்து பணியாற்றும் வாய்ப்பு தமிழர்களுக்கு கைநழுவிப் போனது.

தமிழ் பொதுமக்களுக்கு அது நல்ல ஒரு பாடமாக இருந்தது. முஸ்லிம் கல்வி அமைச்சர் தனது சமூகம் பல வருடங்களுக்குப் பின்னர் உயர்ந்த நிலையை அடைய அடித்தளம் அமைத்தார். சிறிமா அரசாங்கத்தின் 1960 முதல் 65 வரையான முதல் ஐந்து ஆண்டுகளும், இரண்டாவது முறை பதவியேற்ற 1970 முதல் 77 வரையான காலத்திலும். அதன் வழியே முஸ்லிம் சமூகம் இமாலய உயரத்துக்கு எழுந்து நின்றது.

விரல் நுனியில் விசைகளை அழுத்துவது போல கல்வியானது, பாடசாலை அபிவிருத்தி, ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் உபகாரச் சம்பளம் ஆகிய சகல வசதிகளுடன் நிறைவேற் றப்பட்டது. தமிழர்களாகிய நாங்கள் எங்கள் புகார் பட்டியலை தொடர்ந்து தயாரிப்பதுடன் எங்கள் குறைகள் பற்றிப் பாடும் பல்லவியை மெருகேற்றி வருகிறோம்.

1988 நவம்பரில் நடந்த வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் இந்த புறக்கணிப்பு மனநிலை நீடித்திருந்தது. காலையில் ஏற்பட்ட சேதம் மதியம் வரை சரி செய்யப் படாததால் நிலைமை வேறு வழியில் மீட்டெடுக்கப்பட்டது. ஆனால் ஒரு வருடம் வரை போர்க்குணம் கொண்ட தலைவரால் வன்முறை அச்சுறுத்தல் போன்ற எதிர்மறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

உடனடியாக அதைத் தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் சர்வ வியாபகமுள்ள புறக்கணிப்பு தனது இருப்பை மீண்டும் ஒருமுறை உணர வைத்தது, 4 அல்லது 5 வாக்குகள் பெற்றவர்கள்கூட பாராளுமன்றத்துக்கு தெரிவானார்கள்.

கடைசியாக நடந்த புறக்கணிப்பு மற்ற எல்லாவற்றையும் விடக் கொடுமையானது, 2005இல் தமிழர்களை மீண்டு வர முடியாத பள்ளத்தில் தள்ளி ஒரு ஆட்சியமைப்புக்கு கட்டியம் கூறியது. புறக்கணிப்பு மனப்பான்மை எப்போதும் தாண்டவமாடியது.

வேறுபட்ட பல வழிகளில் நாம், நம்மைச் சிக்கலில் மாட்ட வைத்துள்ளோம். 1991இல் ஒரு நிதானமற்ற செயல் எங்கள் அரசியல் இடைவெளியின் முடிவுக்கு ஆரம்பம் இட்டது. 2009இல் உலகம் அதன் தவிர்க்கமுடியாத மறைவை காணநேர்ந்தது.

"உனது கணிப்புக்கு முன்னும் பின்னுமான காரணிகளை உட்புகுத்துவதற்கு முன்னர் நட்பின் பெறுமதியை கணி" என்று திருவள்ளுவர் நல்லறிவாக உபதேசித்துள்ளார். மூலோபாய இடைவெளியை ஒருங்கிணைப்பதற்கான விவேகம், விவேகமற்ற மூர்க்கத்தனத்தால் இழக்கப்படுகிறது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு நாங்கள் எங்கள் தெரிவுகளை நஷ்டப் படுத்தியதுடன் மீதமுள்ள தெரிவுகளையும் கூட இழந்து நிற்கிறோம், தமிழர்களாகிய நாங்கள் இப்போது எங்கே நிற்கிறோம்? கிட்டத்தட்ட எங்கு நின்றோமோ அதே இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறோம்.

அரச வன்மம் மற்றும் சமுதாய அலட்சியம் என்பன்வற்றால் பல தசாப்தங்களாக ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை திரும்பக் கட்டியெழுப்ப அதிக காலம் தேவைப்படுகிறது.

இனி எங்களுக்கு எந்த தெரிவுமே இல்லை என்கிற கருத்துள்ளதான, எங்களுக்கு வர்ணம் தீட்ட இனி ஒரு இடமும் இல்லையே என்ற புலம்பலுக்கு முடிவுகட்ட வேண்டியது அவசியம் அல்லது கட்டாயம் ஆகும்.

**சிறிமா அரசாங்கத்தின் 1960 முதல் 65 வரையான முதல் ஐந்து ஆண்டுகளும், இரண்டாவது முறை பதவியேற்ற 1970 முதல் 77 வரையான காலத்திலும். அதன் வழியே முஸ்லிம் சமூகம் இமாலய உயரத்துக்கு எழுந்து நின்றது. அந்த சமூகத்தின் கல்வியானது, பாடசாலை அபிவிருத்தி, ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் உபகாரச் சம்பளம் ஆகிய சகல வசதிகளுடன் நிறைவேற்றப்பட்டது. தமிழர்களாகிய நாங்கள் எங்கள் புகார் பட்டியலை தொடர்ந்து தயாரிப்பதுடன் எங்கள் குறைகள் பற்றிப் பாடும் பல்லவியை மெருகேற்றி வருகிறோம்.**

# முன்னாள் புலிகளுக்கு எதிராகவும் ஐ.நா.விசாரணைக்குழுவில் முறைப்பாடு

United Nations

முன்னாள் புலிகள் சிலருக்கு எதிராகவும் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவுள்ளன.

யுத்த காலத்தில் காணாமற்போன படையினரின் உறவினர்கள் இந்த முறைப்பாடுகளைச் செய்யவுள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறான முறைப்பாடுகள் சில மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவிடம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இதுவரை 3011 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இறுதிக்கட்ட போரின் போது சிறுவர்களை பலவந்தமாக இணைத்துக் கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாண பெற்றோரினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட முன்னாள் புலிகள் சிலருக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக போரின் போது காணாமற்போன 5034 முப்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் பெற்றோரும் புலிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்ய ஆயத்தமாகி வருவதாக சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலுக்கு பிந்திய வன்முறைகள் தளரவில்லை பாதுகாப்பு ஏற்பாடுகள்

## ஒருவாரம் இந்த நிலை தொடரும்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் ஒரு வார காலத்திற்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னரான வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நிறைவடைந்து ஒரு வார காலத்திற்கு பேரணிகள், ஊர்வலங்கள், வாகனத் தொடரணிகள் மற்றும் அரசியல் கூட்டங்களை நடத்தக் கூடாது.

தேர்தலுக்கு முன்னதாக 73 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# தங்கக்கடத்தல் அம்பலம் மூவர் கட்டுநாயக்காவில் கைது

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட பாரிய தங்கக்கடத்தல் மோசடி ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்த மோசடியின் சூத்திரதாரிகளான மூன்று உள்ளூர் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்கபூரிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 24 தங்கத்துண்டுகளை கடத்திய மூன்று வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்களுடைய பயணப்பொதியில் வைத்து தங்கத்தை கடத்திய மூவரை இன்று அதிகாலை கைது செய்துள்ளதாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர். குறித்த மூன்று வர்த்தகர்களும் கொழும்பைச சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# ஊவாவில் பொன்சேகா கட்சிக்கு என்றும் இல்லாத பின்னடைவு



நடந்து முடிந்த ஊவா மாகாணத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி அதிகரித்துள்ளது. ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவின் கட்சிக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அண்மைக் காலங்களில் நடந்த தேர்தல்களில் பெரும வீழ்ச்சியை சந்தித்து வந்தது. இந்நிலையில் இம்முறை நடந்துமுடிந்த ஊவா தேர்தலில் ஆளும் கட்சிக்கு கடும் நெருக்கடியை அது கொடுத்துள்ளது.


2009 இல் நடந்த தேர்தலில் 25.8 வீதமான வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நடந்து முடிந்த 38.3 வத வாக்குகளைப் பெற்று தேர்தலில் 13 ஆசனங்களைப் கைப்பற்றியுள்ளமையை அதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு கடந்த 2009 தேர்தலின்போது 67.7 வீதமான வாக்குகளைப் பெற்று 23 ஆசனங்களுடன் 2 “போனஸ்” ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்தது. ஆனால் இம்முறையும் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் அக்கட்சியால் 17 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது.

இம்முறை 52.8 வீத வாக்குகளையே ஆளும் கட்சி பெற்றது. மக்கள் விடுதலை முன்னணியில் (ஜே.வி.பி.) வாக்கு வீதமும் இம்முறை அதிகரித்துள்ளது. அக்கட்சி கடந்த தேர்தலில் ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே கைப்பற்றி இருந்தது. இம்முறை 2 ஆசனங்களை கைப்பற்றி வாக்கு வங்கி அதிகரிப்பை காட்டி நிற்கின்றது.

இதேபோன்று நாட்டின் மூன்றாவது பெரும் சக்தியாக வளர்ந்து வரும் கட்சி எனக் கூறப்படும் முன்னாள் இராணு வத்தளபதியான சரத் பொன்சேகாவின் கட்சியான ஜனநாயக முற்போக்கு கூட்டணிக்கு ஒரு ஆசனம் கூடக்கிடைக்கவில்லை.

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? திரிசங்கு சுவர்க்க நிலையில் ஐ.தே.க.



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் யாரைக் களமிறக்குவது என்பது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கடசி அறிவித்துள்ளது.

கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்ரம சிங்க தேர்தலில் போட்டியிடுவார் என தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரை கட்சியின் சார்பில் களமிறக்குவது என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் திட்டங்கள் கிடையாது எனவும் அவருக்கு ஆதரவளிக்க தீர்மானிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தல்களின் பின்னரே இது குறித்து நிர்ணயிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதேச சபை உறுப்பினர் மீது நேற்று அதிகாலை தாக்குதல்

## தாக்கியவரைத் தேடி வலை வீச்சு

(கொழும்பு)

ஹல்தும்முல்ல பிரதேச சபையின் தலைவர் நடத்தியதாக கூறப்படும் தாக்குதலில் எதிர்க்கட்சி உறுப்பினரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 5.10 அளவில் உறுப்பினரின் வீட்டிற்கு அருகில் வாளொன்றினால் தாக்குதல நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

தாக்குதலில் காயமடைந்த ஹல்தும்முல்ல எதிர்க்கட்சி உறுப்பினர் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை நடத்தியதாக கூறப்படும் ஹல்தும்முல்ல பிரதேச சபைத் தலைவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகனை முன்னெடுப்பதற்கு விசேட பொலிஸ் குழுவொன்றை நியமித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறியுள்ளார்.

# ரயில் விபத்துக்களில் சிக்கி இருவர் பலி

(கொழும்பு)

சீதுவ - நீர்கொழும்பு ரயில் பாதையில் 17 ஆம் கட்டைப் பகுதியில் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

குருலு உயன - பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே, கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மோதி இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, கண்டி - கொழும்பு ரயிலின் 105 ஆவது கட்டைப் பகுதியில் ரயிலில் மோதி பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

கடுகன்னாவ பகுதியைச் சேர்ந்த 83 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஜனாதிபதி முறைமை மாற்றம் இனி பேசிப்பயனில்லை

## டி.யூ.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதில் எவ்வித பயனும் கிடையாது என சிரேஸ்ட அமைச்சர் டியு.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை சந்தித்து நிறைவேற்று அதிகாரம் பற்றி பேசுவது நேரத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏற்கனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயதத மாகி வருகின்றன.

இவ்வாறான ஓர் நிலைமையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பேசுவது எந்த வகையிலும் பயனளிக்காது என அமைசசர் டி.யு.குணசேகர சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்புக்கு விட்டுக்கொடுத்தால் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறுவோம்

## ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளை அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டால், நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து விலக நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க அறிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதனை எதிர்க்கின்றோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் புதிய தலைமைத்துவம் புதிய நிபந்தனைகள், காலவரையறைகளுடன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கின்றது.

அரசாங்கம் இதற்கு இணக்கம் வெளியிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து முழுமையாக விலக நேரிடும்.

அரசாங்கத்தின் இந்தத் துரோகச் செயலுக்கு பாரியளவில் மக்கள் எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்படும்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலவரையறைகள் மற்றும் நிபந்தனைகளை விதித்தால்; பிரிவினைவாதத்தைக் கைவிடுமாறு அரசாங்கமும் நிபந்தனை விதிக்க முடியும் .

அரசாங்கம் ஏன் இவ்வாறு நிபந்தனைகளை விதிப்பதில்லை?

தொடர்ந்தும் பிரிவினைவாத கொள்கைகளை பரப்பி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காது, தொடர்ச்சியாக இணைந்து செயற்பட்டு வருவதனால் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வந்த தேசியவாத சக்திகள் மெல்ல விலகிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது என வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.





யாழ்.நகரில் நேற்று இடம்பெற்ற சமாதானப்பேரணியை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயப்பெரேரா ஆரம்பித்து வைத்து சர்வமதத் தலைவர்களுடன் பேரணியில் பங்கு கொள்வதனையும் பேரணியின் மேலும் சில பதிவுகளையும் காணலாம். (படங்கள்: பார்த்தீபன்)

# இயற்றமிழை பயிற்றுவிக்க கலைக்கூடம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்ணில் முதல் முறையாக இயற்றமிழைப் பயிற்றுவிக்கும் நோக்கில் அறிவாலயம் கலைக்கூடம் ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்கால பிள்ளைகளும் பேச்சாளராக விவாதிகளாக இலக்கிய விமர்சகர்களாக உருவாக வேண்டும் என்னும் நோக்கில் இல.28 குமாரசாமி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம் (யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக) என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் அறிவாலயத்தில் பள்ளிச் சிறார்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை விருப்புடைய அனைவருக்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அறிவாலயம் கலைக்கூடத்தின் நோக்கங்களாக, ஆற்றல்களின் மையம், ஆளுமைகளின் குவியம் என்னும் நோக்கில் நல்ல இலக்கியங்களை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தல், வாசிக்கும் ஆர்வத்தை தூண்டுதல், தமது கருத்துக்களை தயக்கமின்றி பலர்முன் உரிய வகையில் எடுத்துரைக்கும் மொழியாற்றலை வளப்படுத்தல், போட்டிகளுக்கு உரிய வகையில் தயார்ப்படுத்தி விருதுகளையும் பரிசுகளையும் வெல்ல வைத்து தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பவையாகும்.

மேலும் பயிற்சி விவாதக் களங்களை ஏற்படுத்தி விவாதிக்கும் ஆற்றலை மேம்படுத்தல், ஆற்றலும் தகைமையும் மிக்க ஆளுமையாளர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சாற்றல எழுத்தாற்றலைப் புடம்போடல், நிகழ்வுகளுக்கு தலைமைதாங்கும் திறனையும் அவற்றைத் தொகுத்து முன்னிலைப்படுத்தும் வல்லமையையும் வளர்த்தெடுத்தல், குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் இயல நிகழ்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல், தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்குபற்ற களம் அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகள் ஆற்றப்படவுள்ளன.

இந்த அறிவாலயம் கலைக்கூடம் விஜயதசமி தினமாகிய எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்ப தினத்தன்று பிள்ளைகள் பெற்றோருடன் சமூகமளித்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (63)

# யூனியன் கல்லூரியின் பொதுஅறிவுப் போட்டி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் விவாதிகள் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி நடாத்தப்பட்டது. "யூனியன்ஸ் விவாதிகள் கழகம்" என்ற பெயரோடு செயற்பட்டு வரும் மேற்படி கழகமானது "வாய்ப்பில் வாய்மையை வலியுறுத்துவோம்" என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

மாணவர்களிடையே மறைந்து இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்கின்ற முனைப்பில் பல்வேறு போட்டிகள், செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் பாடசாலையின் மாணவர்களிடையே பொது அறிவை வளர்க்கும் நோக்குடன் பொது அறிவுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்டது.

ஆசிரியர் சிறிபிரகாஷின் வழிநடாத்தலிலும் அதிபர் வே.இரத்தினகுமார் மேற்பார்வையிலும் முற்றுமுழுதாக மாணவர்களின் செயற்பாடாக இக்கழக. செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (17)

# முரசின் இன்றைய பலன்



(22.09.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 06 ஆம் திகதி.
திரயோதசி / மரணயோகம்.
மக நட்சத்திரம் பி.ப. 02.15 வரை. பின் பூரம்.
இராகு காலம 07.32 - 09.02 வரை. சுபநேரம 12.02 - 01.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்ப முன்னேற்றம் கருதி சேமிப்பில் கவனம் செலுத்தமுன்வருதல், அவசர முடிவினை எடுக்காமல் ஆராய்ந்து பார்த்து காரியம் சிறக்க செயற்படுதல் நன்று. |
| ரிஷபம் | உணவகத்தில் பரிசோதனைக் குழுவின் திடீர் பிரவேசத்தால் பதகளிப்படைதல். |
| மிதுனம் | திருமணத்தை முன்னிட்டு சொந்த இடத்துக்கு வருதல், பொருட்களைக் கைவசம் எடுத்துச் செல்வதினால் திருட்டினின்றுத் காப்பாற்றப்படல். |
| கடகம் | பிள்ளைகளின் பிழையான செயற்பாடுகளை திருத்த முயன்று வெற்றிகாணல், கொடுக்கல்வாங்கல் மனதிற்கு வேதனை தரினும் தவணை சொன்னதால் திருப்திப்படல். |
| சிம்மம் | மனைவியின் தேகநலம் அடிக்கடி பாதிப்படைவதினால் தெய்வதலங்களுக்கு விஜயம் செய்ய முற்படல், அவசரத்தினால் திகதிதப்பிய மருந்து வில்லைகளைப்பெற்று மனக்கிலேசமடைதல். |
| கன்னி | இனிக்கப்பேசி கழுத்தறுக்க எத்தணிக்கும் நண்பர் விடயத்தில் அவதானமாக இருங்கள், வியாழசுகம் நலமே காணப்படுவதினால் மனைகோலநிலமெடுக்க ஜோதிடரை நாடுதல். |
| துலாம் | சொத்துப்பிரச்சினை முன்னிட்டு குடும்பத்தில் ரகளை ஏற்பட்டுபின் சகஜநிலையடைதல், வெளிநாட்டில் மாணவர் வீசாபெற்று கல்வி முயற்சியில் ஈடுபடவிழைதல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனி இருந்தாலும் தெய்வநம்பிக்கை மூலம் புதிய முயற்சியில் பிரவேசித்தல், சகஊழியர்களுடன் சுமுக உறவைப்பேணி, பணியின் தேக்கத்தை அற்றுப்போகச் செய்துவிடல். |
| தனுசு | மொழிப்பிரச்சினை தீர்ந்தபடியினால் விவாகத்திற்காக வெளிநாடு செல்லமுற்படல், பொறுப்பைக்கோராமல் பணம், பொருளைக் கொடுத்து பின் வேதனையைத்தக்க வைக்காதீர்கள். |
| மகரம் | தடைப்பட்டிருந்த விவாக முயற்சி இருபக்கமும் ஏற்பட்ட புரிந்துணர்வினால் வெற்றிதரல், வெளியூர் பிரயாணம் பற்றி தீர்க்கமான முடிவினை மேற்கொள்ளமுடியாது சங்கடப்படுவீர்கள். |
| கும்பம் | கணக்கில் தில்லுமுல்லுக் காணப்பட்டதால் நம்பகம் இழந்து வாடிக்கையை தொடராது விடுதல், சகபாடிகளைக் கைவிட்டு கல்வியில் கவனத்தைச் செலுத்த முற்பட்ட மகனை எண்ணிப்பெருமை அடைதல். |
| மீனம் | சாதுரியமான பேச்சின் மூலம் பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதால் நிம்மதி பிறத்தல், நட்புவட்டாரம் விரிவடைவதினால் மதிப்பும் கௌரவமும் தக்கவைக்கும். |

# நவராத்திரி விழாவின் போது ஆரூரனின் சொற்பொழிவு

கலைமணி செந்தமிழ்விறலி டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயிலில் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவின் போது விசேட சொற்பொழிவாற்றவுள்ளார்.

இவர் அகில இலங்கை வானொலி மற்றும் இந்திய வானொலி தொலைக்காட்சி என்பவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சமய இலக்கியச் சொற்பொழிவுகள் பல ஆற்றியுள்ளார். பட்டிமன்ற நிகழ்வுகள் பலவற்றிலும் கலந்து சிறப்பித்து வரும் இவர் கலைமாணி, செந்தமிழ் விறலி உட்பட பல்வேறு பட்டங்களையும் பெற்றுள்ளார். (10)

# இந்துக்கள் வாழும் பிரதேசங்களில் நவராத்திரிவிழா அனுஷ்டிப்பு

நாளை மறுதினம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஒக்டோபர் 3 ஆம் திகதி வரை நாடெங்கிலும் நவராத்திரிவிழா சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்துக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் கல்விநிறுவனங்களில் நாளை மறுதினம் புதன்கிழமை கும்பம் வைக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை நண்பகல் 12.02 இற்கு இராகுகாலம் ஆரம்பிப்பதால் காலையிலேயே கும்பம் வைக்கும் நிகழ்வு இடம் பெறும். தொடர்ந்து ஒன்பது நாட்கள் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கான பூசைகள் இடம்பெற்று இறுதிநாளான ஒக்டோபர் 3 ஆம் திகதி விஜயதசமி நிகழ்வு இடம்பெறுவதோடு அன்று காலை வித்தியாரம்பம் (ஏடுதொடக்குதல்) நிகழ்வும் இடம்பெறும். (10)

## சின்னம் சூட்டும் விழா

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் வே.இரத்தினகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் புதிய சாரணியர்களுக்கான சின்னம் சூட்டுதல், சாரணியர்களின் கடமையை உணர்த்துதல் ஆகியன இடம் பெற்றன.

சின்னங்களை சூட்டிக் கொண்ட மாணவர்கள் சாரணிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது தொடர்பில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (17)


## வலிகாம வலயபாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளதுடன் இக்கூட்டத்தில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை இவ் மீளாய்வுக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



## வடகொரிய வீரர் உலக சாதனை

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் பளுதூக்குதல் பிரிவில் வடகொரிய நாட்டைச் சேர்ந்த ஓம் யுன் சோய் என்ற வீரர் உலக சாதனை படைத்தார்.

ஆடவர் 56 கிலோ உடல் எடைப்பிரிவில் சோய், கிளீன் அண்ட் ஜெர்க் பளுதூக்குதல் பிரிவில் 170 கிலோ எடை தூக்கி உலக சாதனைக்குரியவரானார்.

இவர் இதற்கு முன்னால் இதே பிரிவில் 169 கிலோ எடைதூக்கி செய்த தனது சாதனையை நேற்று முறியடித்தார். இதன் மூலம் வடகொரியா தனது முதல் தங்கத்தை வென்றுள்ளது.

இவர் 2012 ஒலிம்பிக் சம்பியன் என்பதோடு, 2013ஆம் ஆண்டு உலக சம்பியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மொத்தமாக இவர் 298 கிலோ எடைதூக்கி புதிய ஆசிய சாதனையையும் படைத்தார்.

17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்சியானில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டிகளில் 14 பிரிவுகளில் சுமார் 150 வடகொரிய வீரர்கள் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜோன்சன் என்ன கொம்பா?



ஜோன்சனின் பந்து வீச்சை எதிர்கொள்வது குறித்து நாங்கள் பயப்படவில்லை. ஆடுகளத்தில் ஒவ்வொரு பந்தையும் எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பது எமக்குத் தெரியும். அதேபோன்று ஜோன்சனின் பந்தையும் எதிர்கொள்வோம் என ஆப்கான் கப்டன் மொகமட் நபி தெரிவித்துள்ளார்.

ஆப்கான் கிரிக்கெட் வீரர்கள் தற்போது பேர்த் நகரில் உள்ளனர். அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் சில கிரிக்கெட் போட்டிகளில் ஆப்கான் அணி விளையாடவுள்ளது.


எதிர்வரும் 2015 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் அவுஸ்ரேலியா, ஆப்கான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே நபி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், நாங்கள் ஏற்கனவே ஜோன்சன் பந்து வீச்சை எதிர்கொண்டுள்ளோம். யாரும் அவரது பந்து வீச்சைக் கண்டு அப்போது அஞ்சவில்லை. இனிமேலும் அச்சப்படப் போவதில்லை. ஆனாலும் அவுஸ்ரேலியா என்றால் சும்மாவா, அது ஒரு மிகப்பெரிய சவால், இன்னும் 5 மாதங்கள் உலகக் கோப்பைக்கு இருக்கிறது அதற்குள் இந்த ஆடுகளங்களில் நல்ல முறையில் தயார் செய்து கொள்வோம்.

ஆப்கானில் கிரிக்கெட் ஆட்டம் மீதான மோகம் அதிகம். நிறைய இளம் வீரர்கள் தங்கள் இடத்திலிருந்து வெளிவருகின்றனர்.

அவர்களுக்கு கர்வம் இருக்கிறது. ஆப்கான் நாட்டினர் கொண்டுள்ள அதே போராடும் குணம் இவர்களிடத்தில் உள்ளது. பல ஆண்டுகளாக போர்ச் சூழலில் வாழ்ந்து வந்துள்ளோம். ஆனால் யாரும் இதுவரை ஆப்கானை முற்றிலும் வீழ்த்தி விட முடியவில்லை. ஆகவே இயல்பான ஆக்ரோஷத் தன்மையை ஊக்குவித்து மேலே கொண்டு வரப் போகிறேன், ஒழுக்கத்துடன் கூடிய இயல்பான திறமையினால் சில சவால்களை ஏற்படுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அணைந்தது ஜோதி



ஆசிய விளையாட்டு ஜோதி நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் திடீரென அணைந்தது. போட்டி நடைபெறும் 16 நாட்களும் தொடர்ந்து எரிய வேண்டிய இந்த சுடர் தொழில் நுட்ப கோளாறு காரணமாக அணைந்தது. உடனே அதிகாரிகள் 10 நிமிடத்தில் சரி செய்து மீண்டும் எரியச்செய்தனர்.

# பேர்த், பஞ்சாப் அணிகள் அபார வெற்றி



(ராய்ப்பூர்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு போட்டிகளில் பேர்த் மற்றும் பஞ்சாப் அணிகள் வெற்றிபெற்றன.

10 அணிகள் மோதும் ஆறாவது சம்பியன் லீக் ருவென்ரி-20 போட்டி இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றன.

டொல்பின்சும், பேர்த் ஸ்கார்ச்சர்சும் மோதின. முதலில் ஆடிய டொல்பின்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கயா ஜோன்டா 63 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 165 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பேர்த் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. 26 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்லாக 40 ஓட்டங்களைப் பெற்ற மார்ஷ் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, மொகாலியில் நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் பார்படோஸ் டிரைடென்ஸ் அணியும் மோதின. முதலில் ஆடிய பார்படோஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராய்மன் ரீபர் 60, முனவீரா 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பஞ்சாப் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பட்டேல் 23, சேவாக் 31, 34 பந்துகளை எதிர்கொண்டு மில்லர் இரண்டு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

## அஜ்மலுக்கு முரளி ஆதரவு

சர்வதேச கிரிக்கெட் சபையால் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் வீரர் சயிட் அஜ்மலுக்கு இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் ஆதரவளித்துள்ளார். பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் அஜ்மலின் முறையில்லாத பந்து வீச்சால் சர்வதேச கிரிக்கெட் சபை அவருக்கு தடை விதித்தது. பல்வேறு தரப்பினரும் ஐ.சி.சி-யின் நடவடிக்கை சரியானதே என்று கூறும் நிலையில் முத்தையா முரளிதரன் தன்னுடைய கருத்தை வெளியிட்டுள்ளார். இது குறித்து முரளிதரன் குறிப்பிடுகையில், இப்போது உள்ள நிலை கடினமான ஒன்றாக இருக்கும். இந்தச் சமயத்தில் தர்ன் தடைகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். மனதளவில் வலிமையாக இருந்தால் தான் மீண்டும் வர முடியும். இதே போன்ற குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்பட்ட போது நான் அவரின் மனநிலையில் தான் இருந்தேன். அவர் தனது கைகளை 15 டிகிரிக்கு குறைவாக மாற்றி, பந்து வீசி தன்னை நிரூபிக்கும் போது அவரால் மறுபடியும் சாதிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

முத்தையா முரளிதரன், இதே போல் பிரச்சினையில் சிக்கியவர். 2004 ஆம் ஆண்டு இவருடைய பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பானது என தடைவிதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சானியா ஜோடி சம்பியன்

(டோக்கியோ)

பான்பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா, காரா பிளாக் (சிம்பாப்வே) ஜோடி சம்பியன் பட்டம் வென்று கோப்பையை தக்கவைத்துக் கொண்டது.

இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஸா, கர்லா சுவாரஸ் நவர்ரோ ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதிய நடப்பு சம்பியன் சானியா, காரா ஜோடி 6,2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றது. இரண்டாவது செட்டில் ஸ்பெயின் வீராங்கனைகள் கடும் நெருக்கடி கொடுத்தாலும், பதற்றமின்றி விளையாடிய சானியா ஜோடி 6,2, 7,5 என நேர் செட்களில் வென்று பான்பசிபிக் ஓப்பனில் தொடர்ந்து 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது.

இறுதிப் போட்டி ஒரு மணி, 15 நிமிடம் நீடித்தது குறிப்பிடத்தக்கது. மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் சேர்பியாவின் அனா இவானோவிச் 7-5, 6-3 என்ற நேர் செட்களில் ஏஞ்சலிக் கெர்பரை (ஜேர்மனி) வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரை யிறுதியில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஸாவுடன் மோதிய கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) 6-4, 2-6, 6-2 என்ற செட் கணக்கில் வென்றார். இறுதிப் போட்டியில் இவானோவிச், வோஸ்னியாக்கி மோதவுள்ளனர்.

CHAMPIONS LEAGUE TWENTY 20


## இன்றைய ஆட்டம்

**டொல்பின்ஸ் எதிர் சென்னை சூப்பர் கிங்ஸ்**

**இடம்: பெங்களூர்**

**நேரம் இரவு 8 மணி**

# கிண்ணம் வென்றார் ஆனந்த்



(பில்பாவோ)

பில்பாவோ மாஸ்டர்ஸ் சதுரங்கத் தொடரில், இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சம்பியன் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில், பில்பாவோ மாஸ்டர்ஸ் இறுதிச் சதுரங்கத் தொடர் நடைபெற்றது. முதல் ஐந்து சுற்றுக்களின் முடிவில், இந்திய கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த், 11 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்தார்.

ஆறாவது மற்றும் கடைசிச் சுற்றில் ஆனந்த், ஆர்மேனியாவின் ஆரோனியனை சந்தித்தார். இதில் கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், ஆரம்பத்தில் இருந்து ஏமாற்றினார். 46ஆவது நகர்த்தலில் தோல்வியை ஏற்றுக் கொண்டார்.

இருப்பினும், ஏற்கனவே 11 புள்ளிகள் பெற்றிருந்த ஆனந்த், சம்பியன் பட்டம் வென்றார். ஆரோனியன் (10), இரண்டாவது இடம் பெற்றார். தலா 5 புள்ளிகள் பெற்ற உக்ரைனின் ரஸ்லன், ஸ்பெயினின் பிரான்சிஸ்கோ 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டனர்.

சமீபத்தில் கேன்டிடேட்ஸ் சதுரங்கத் தொடரில் சம்பியன் ஆன, ஆனந்த், தற்போது பில்பாவோ மாஸ்டர்ஸ் சதுரங்கத் தொடரிலும் அசத்தியுள்ளார்.

# பாடசாலை மட்ட தேசிய பளு தூக்கலில் பதக்கம் வென்றோருக்கு பாராட்டு விழா






யாழ். இந்துக் கல்லூரி (48)





வேம்பாடி மகளிர் உயர் தர பாடசாலை (93)

விளையாட்டுச் செய்திகள்



யாழ். சிதம்பராக் கல்லூரி (12)



தெல்லிப்பளை மகாஜன கல்லூரி (48)

## மென்பந்து கிரிக்கெட் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக நலன் புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்றும், நாளையும் கல்வியங்காடு ஞானபாஸ்கரோத மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானங்களில் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் 15 பிரதேச செயலக பணியாளர்கள் அணியுடன் மாவட்ட செயலக அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கொக்குவில் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் அரையிறுதியில் பற்றீசியன்ஸ், சென்றலைட்ஸ்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் நடாத்தும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் அரையிறுதி போட்டிக்கு பற்றீசியன்ஸ் மற்றும் யாழ். சென்றலைட்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இரு காலிறுதிப் போட்டிக்ள் நடைபெற்றன. முதலாவது காலிறுதிப் போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எஸ்.ஏ. அணியும் பற்றீசியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 26.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதா 32, தரன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மிலாண்டோ நான்கு, நிதர்சன், றோபேட் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி சதானந்தனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 23.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சதானந்தன் 54, டர்வின் 40, அஜித் 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயராசா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ்வெற்றியின் மூலம் பற்றீசியன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் திருநெல்வேலி சி.சி. அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி சி.சி. அணி 30 ஓவர்கள் நிறைவில் 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிதுஷன் 54, அசோக் 47, லவக்ஷன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டார்வின் மூன்று, வதுசனன் இரண்டு, சாள்ஸ், எரிக் துசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றிலைட்ஸ் அணி செல்டனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 23.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுககளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் செல்டன் 95, டார்வின் 54, வதுசனன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன், கௌசிகன், விதுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் சென்றலைட்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (12)

## மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக மென்பந்து கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதி சேகரிக்கும் நோக்குடன் நாம் நண்பர்கள் அமைப்பு நடாத்தும் ஆறு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்ற வருகின்றது.

நூற்றுக்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் சிலவற்றில வெற்றி பெற்ற அணிகளின் விபரம் வருமாறு:

ஸ்ரார் அணியை கொக்குவில் பிரம்படி அணி ஏழு ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் ஆடிய கொக்குவில் பிரம்படி அணி 33 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய ஸ்ரார் அணி 26 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது போட்டியில் மைக்கல் அணியும், காமாட்சி அணியும் மோதின. முதலில் ஆடிய மைக்கல் அணி 46 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய காடாட்னி அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் காந்தி நியூஸ்ரார் அணியும் வராகி அணியும் மோதின. முதலில் ஆடிய காந்தி நியூஸ்ரார் அணி 62 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வராகி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

மற்றுமொரு போட்டியில் கொட்டடி இளங்கதிர் அணியும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியும் மோதின. முதலில் ஆடிய கொட்டடி இளங்கிர் அணி 93 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு அடிய வை.எம்.எச்.ஏ. அணி 35 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. (48)

## மத்தியூஸ் நம்பிக்கை

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு முன்பதாக மலிங்க உடற் தகுதியைப் பெற்றுவிடுவர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இலங்கை அணியின் நம்பிக்கைக்குரிய பந்துவீச்சாளர் அவர். அணியின் வெற்றிக்காக தன்னை அர்ப்பணித்துச் செயற்படக்கூடிய வீரர். உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக குணமடைய வேண்டும் என சக வீரர்கள் அனைவரும் வேண்டுகின்றோம்.

இலங்கை வலுவான அணி. உலகக் கிண்ணத்தொடரில் சிறப்பாகச் செயற்படும் என. இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**13**

**- சுப்பராஜன் [வானவில் இதழ்]**

விஜேவீர யாழ்ப்பாணச் சிறையில் இருந்து விடுதலையாகி, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஜே.வி.பி. நடாத்திய பொதுக்கூட்டத்திற்கு வந்தபோது, நேரடியாக முரசுமோட்டை சென்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தங்கத்துரை என்ற தோழரை அழைத்து வந்து கூட்ட மேடையிலும் அவரை ஏற்றி அறிமுகம் செய்ததுடன், தனக்கு உதவியதற்காக தமிழ் தோழர்களுக்கு பகிரங்கமாக நன்றியும் தெரிவித்தார்.

பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியுடன் வேலை செய்த பா.கணேசபிள்ளையை கிளிநொச்சி அமைப்பாளராகவும் நியமித்தார்.

அத்துடன் பொன்சேகா என்ற ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரை தமது இயக்கத்தின் யாழ்ப்பாண அமைப்பாளராக நியமித்து, சுன்னாகத்தில் காரியாலயம் ஒன்றையும் திறந்து செயற்பட்டனர். இருந்தாலும் ஜே.வி.பி. தேசிய இனப்பிரச்சினையில் தமது கொள்கை என்ன என்பதை அந்தக் காலகட்டத்தில் தெளிவாக முன்வைக்கவில்லை.

ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது என்று பொதுவாகச் சொல்லி வந்தார்கள். பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என மொட்டையாகச் சொல்லினர்.

(இன்றும் அந்தப் பல்லவியையே பாடுகின்றனர். ஆனால் நடைமுறையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுத்த முயற்சிகள் எல்லாவற்றையும் எதிர்த்தே வந்திருக்கின்றனர்)

1977இல் ஜே.ஆரின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைந்து, அது பின்னர் கொடிய உள்நாட்டு யுத்தமாகவும் மாறியது. அதைத் தொடர்ந்து ஜே.வி.பி தனது தமிழ் பகுதி வேலைகளை முற்றிலுமாக நிறுத்திக் கொண்டது. அத்துடன் முற்றுமுழுதாக ஒரு சிங்கள தேசியவாத இயக்கமாகவும் செயற்படத் தொடங்கியது.

இங்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவது அவசியமானது.



1977இல் ஜே.ஆர். ஆட்சிக்கு வந்த பின்னரான காலகட்டத்தில் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளராக லயனல் போபகே என்பவர் இருந்தார். அந்த நேரத்தில் கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு தமது கொள்கைகளை விளக்குவதற்காக வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்தில் ஜே.வி.பி.யினர் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தனர். கூட்டத்துக்கு பொன்சேக தலைமைதாங்க, லயனல் போபகே பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார். பெருந்தொகையான கொழும்பு வாழ் தமிழ் மக்களும், தமிழ் இளைஞர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அந்த நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இனவன்செயல் ஒன்றை நடாத்தி முடித்திருந்த ஜே.ஆர். அரசாங்கம், மீண்டும் தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பிக்கும் முஸ்தீபுகளிலும், மும்மொழித் திட்டம் என்ற பெயரில் சிங்கள மொழித் திணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட ஆரம்பித்திருந்தது.

எனவே ஜே.வி.பி. இந்த விடயங்களில் என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது என அறிய விரும்பிய முற்போக்கு இளைஞர்கள் சிலர், அப்பொழுது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் வேலை செய்து கொண்டிருந்த தோழர். வி.விசுவானந்ததேவன் (பின்னர் என்.எல்.எப்.ரி. இயக்கத்தை உருவாக்கிய முக்கியஸ்தர்களில் ஒருவர்) தலைமையில் ஜே.வி.பி. பேச்சாளரிடம் மூன்று கேள்விகளை எழுப்பினர்.

அதில் ஒரு கேள்வியான ஜே.ஆரின் மும்மொழித் திட்டம் குறித்து கருத்துரைத்த லயனல் போபகே, எல்லோரும் மூன்று மொழிகளையும் படிக்க வேண்டும் எனச் சொல்லி, ஜே.ஆரின் திட்டத்தை ஆமோதித்துக் கொண்டார்.

அடுத்த கேள்வியான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், இலங்கையில் எல்லோரும் எல்லா இடங்களிலும் வாழலாம் என்று சொல்லி கேள்வியின் அடிப்படையைத் திரித்துவிட்டார்.

ஆனால் முக்கியமான ஒரு கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை. "அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்று ஜே.வி.பி. சொல்லி வருகின்றது. அந்தத் தீர்வு நடைமுறையில் அதாவது நிர்வாக அமைப்பு ரீதியாக எவ்வாறு இருக்கும்? சமஸ்டியா, பிரதேச சுயாட்சியா அல்லது ஒற்றையாட்சி அடிப்படையிலானதா? இதில் எந்த வகை?" என்ற அடிப்படையில் கேள்வி முன்வைக்கப்பட்டது.

ஆனால் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்காத லயனல் போபகே, இந்தக் கேள்வி பற்றி தமது இயக்க மத்தியகுழுவில் விவாதித்த பின்னர், தமது கட்சிப் பத்திரிகையான "செஞ்சக்தி"யில் அதற்கு விளக்கம் தரப்படும் எனச் சொல்லி நழுவிக் கொண்டார்.

ஆனால் இன்றுவரை போபகேயோ அல்லது ஜே.வி.பியின் வேறு எந்தத் தலைவரோ அந்தக் கேள்விக்குப் பதில் தரவில்லை. இனிமேலும் ஒருபோதும் பதில் தரப்போவதில்லை என்பதை ஜே.வி.பி.யின் போக்கைப் பார்த்தால் புரியும்.

மாறாக அவுஸ்திரேலியாவுக்கு இடம் பெயர்ந்து அங்கு வாழ்ந்துவரும் போபகே, அங்கு புலி ஆதரவாளர்களுடன் கூடிக்குலாவுவதுடன், இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வருகிறது எனவும் புதிய பல்லவி பாடி, தமிழ் மக்களின் ஆத்மார்த்த நண்பராகத் தன்னை விளம்பரப்படுத்தி வருகின்றார்.

பிற்காலத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.வி.பி. நடாத்திய இந்திய எதிர்ப்பு, தமிழ் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளையும், தம்மை எதிர்த்த பொதுமக்களை கொன்று குவித்ததையும், விஜேவீரவினது ஏனைய தலைமை உறுப்பினர்களினதும் அழிவையும், அதன் பின்னரான ஜே.வி.பி. தலைமை யுத்த நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டதையும், சந்திரிகா கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை ஐ.தே.க.வுடனும் ஏனைய பேரினவாத சக்திகளுடனும் சேர்ந்து முறியடித்ததையும், இந்தக் கட்டுரைத் தொடர் ஆராயவில்லை. அவை தனியாக ஆராயப்பட வேண்டியவை என்றபடியால் இந்தக் கட்டுரைத் தொடர் இத்துடன் முடிவுக்கு வருகின்றது.

# சொன்னார்கள்...

**உருவேத்துதல் தவிர உருப்படியாக எதுவுமில்லை**

ஒரு மனிதனின் வாழ்வில் பதினைந்து முதல் பதினெட்டு வயது வரையிலான பருவம் மிகவும் கடினமானது என்று நினைக்கிறேன்.



வறட்டுச் சித்தாந்தங்களும், தவறான புரிதல்களும் நம்மை எளிதில் ஆட்கொண்டுவிடும் வயது அது. அந்த வயதில் ஏற்படும் தவறானதொரு சிறிய சலனம் கூட நம்மைப் படுகுழியில், வன்முறைப் பாதையில் தள்ளிவிடலாம்.

அதிலும் எளிதில் உணர்ச்சி வசப்படுகிற, சினிமாப் பித்துப் பிடித்த தமிழ்நாட்டுப் பதின்பருவச் சிறுவர்களை வன்முறைப் பாதையில் திருப்பிவிடுவது மிகவும் எளிது. இலங்கைப் பிரச்சினையும், நக்ஸலைட்டுகளும் கொடிகட்டிப் பறந்த எண்பதுகளில் கருணாநிதி, கா.காளிமுத்து, வை.கோபாலசாமி போன்றவர்கள் இந்தப் பணியினைச் செவ்வனே செய்தார்கள். இன்றைக்கு செபாஸ்டியன் சைமன் (சீமான்), திருமாவளவன் போன்றவர்கள் செய்துவருகிறார்கள்.

வன்முறையைத் தூண்டி அதில் லாபமடைவது என்பது தமிழ்நாட்டில் நல்லதொரு தொழில். அதில் இவர்கள் விற்பன்னர்கள். எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே இவர்களின் திருப்பணியே தவிர, உருப்படியான எந்தச் செயலும் இவர்களால் இங்கு நிகழ்ந்ததில்லை என்பது மறுக்கவியலாத உண்மை.

**- எழுத்தாளர் பி.எஸ்.நரேந்திரன்**

**தனிநாட்டுக்கு எதிராக இங்கிலாந்துப் பிரதமர்**

பிரிட்டனின் பகுதியாக ஸ்கொட்லாந்து தொடர வேண்டும் என எங்களுடைய இதயம் கூறுகிறது. ஆனால் தனி நாடாக வேண்டும் என்ற முடிவு ஏற்படுமானால், அது சோதனை முறையிலான தற்காலிகப் பிரிவாக இருக்காது. பிரிவினை என்பது மிகுந்த வேதனையளிக்கும்.




இந்தப் பகுதியினரின் ஓய்வூதியம் முதல் கரன்சி வரை ஏராளமான பொருளாதார விஷயங்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும். நமது இராணுவம் துண்டாடப்படும். இரு நாடுகளுக்கும் இடையே உருவாகும் புதிய எல்லைக்கோட்டைக் கடப்பது எளிதல்ல என்ற நிலை உருவாகும்.

சுதந்திர நாடு என்ற கரைந்து போய்விடக் கூடிய கனவை ஸ்கொட்லாந்து மக்கள் ஏற்கக் கூடாது என விரும்புகிறேன்

**- இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன்**

**நரேந்திர மோடியும் நமது மோடுகளும்**



பதவிக்கு வந்த நாள்தொட்டே மோடி இலங்கை அரசாங்கத்தை மகிழ்விக்கும் விதமாகவும் த.தே.கூ. தலைவர்கள் அறிவித்த ஒவ்வொரு எதிர்பார்ப்பிலும் மண் விழுத்தும் விதமாகவும் சைகைகளை அனுப்பியுள்ளார். அதற்குப் பிறகும் மோடி நல்லவர் ஆனால் சுப்பிரமணியசுவாமி பொல்லாதவர் என்பது மாதிரியான மோட்டுத்தனமான விளக்கங்கள் வருகின்றன என்றால் தமிழ்த் தலைமையின் உலக அறிவு மிகவும் கவலை தருவது.

இங்கே செய்ய வேண்டிய முக்கிய காரியங்கள் எதையும் கவனிக்கத் தமிழ்த் தலைமைகள் ஆயத்தமாக இல்லை. இன்று தேசிய இனப்பிரச்சினை முஸ்லிம் மக்களையும் கவ்வியுள்ளது. மலையகத் தமிழரும் அரசாங்கத்தாற் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றனர். சிங்கள மக்கள் அரச அடக்குமுறைக்கு முகங்கொடுக்கின்றனர். அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிய அற்ப அக்கறையும் இல்லாமல் திரும்பத் திரும்பத் தமிழ் மக்களின் அவலங்களைப் பற்றித் தமிழ் மக்களிடமும் "சர்வதேச சமூகத்திடமும்" புலம்புவதால் தமிழ் மக்கள் மேலும் தனிமைப்படுவதற்கே அவர்கள் வழிதேடுகிறார்கள்.

தேசிய இனப்பிரச்சினை இலங்கையின் தலையாய பிரச்சினை என்பதில் மறுப்பில்லை. ஆனால் அது வெறுமனே சிங்களவர்-தமிழர் பகைமை பற்றியதல்ல. அதற்கு ஒரு வர்க்கப் பரிமாணமுண்டு. அதற்கு ஒரு சனநாயக மறுப்புப் பரிமாணமும் உண்டு. இவற்றை விளங்கினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பிற சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களுடன் இணைக்கும் தேவை விளங்கும். அதிலும் முக்கியமாக, அரச ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சிங்கள மக்களுடன் கைகோர்க்கும் தேவை விளங்கும்.

தமிழ்த் தேசியத் தலைமை அமெரிக்க ஏகாதிபத்தியப்

# முன் யோசனையில்லாமல் செயல்படலாமா?



நரி ஒன்று தாகத்தால் தவித்தது. அதற்கு எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்வது...? தண்ணீரைத் தேடி அலைந்தது. தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்தது. கிணற்றின் அருகே சென்றது, கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உட்னே வாளி "விர்"ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்த பின் மேலே பார்த்தது. "எப்படி வெளியேறுவது" என்று யோசிக்கத் தொடங்கியது. "மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?" என்று யோசித்தது. நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது. அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிண்ற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டது.

"அடடா! நரி ஐயா! உள்ளே என்ன செய்கிறீர்கள்?" எனக் கேட்டது.

"நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்" என்றது நரி.

ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி "சரசர"வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது.


நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது.

"நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்". என்று கூறிக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பியோடியது.

பாவம் ஓநாய்... மாட்டிக் கொண்டு தவித்தது!

எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும். முன் யோசனையுடன் செயற்பட வேண்டும்.

# மைதாவா யோசியுங்கள்!



நாம் உணவில் பயன்படுத்தும் மைதா மாவில் [illegible]ன் வெண்மைத் தன்மையைக் கூட்ட (BENZOYL PEROXIDE) பென்சோயில் பெரொக்சைட் பயன்படுத்தப்படுகிறது. இது தலைமுடியை கருமையாக்க பயன்படும் DYE-யில் பயன்படுகிறது. அத்துடன் நீரிழிவு நோயினை அதிகப்படுத்தும் அலோக்ஸன் எனும் ரசாயனம் வேறு கலக்கப்படுகிறது. அத்துடன் அசோடிகார்போனமைட், குளோரின் வாயுக்கள் அடங்கும்.

மைதா உணவை உண்ணும்போது இரத்தத்தில் வெல்லத்தின் அளவு உடனே ஏறும், மைதா உணவில் தயாரிக்கப்படும் பரோட்டா, நூடுல்ஸ், பீட்சா, பாண், கேக், சமோசா ஆகியவை நல வாழ்விற்கு வேட்டு வைத்துவிடும்.

நீரிழிவு நோயை அதிகப்படுத்துவதில் அரக்கன் மைதா.

ஒரு கிராம் காபோவைதரேற்றில் 9 கலோரி சக்தி உள்ளது. பரோட்டாவில் முழுவதும் காபோவைதரேற் மட்டுமே உள்ளது. மைதா விலை குறைவுதான். ஆனால் அது வருங்காலத்தில் மருத்துவமனைக்கு வைக்கும் செலவோ அதிகம்.

படுகொலைக்காரர்களையோ இந்துத்துவ வெறியர்களையோ கண்டிக்காமல் விடுவ த[illegible] அவர்கள் இலங்கைத் தமிழர்களின் நண்பர்களாக மாட்டார்கள். மாறாக, தமக் காகக் குரல் கொடுக்கக் கூடியவர்களிட மிருந்து தமிழர்கள் தனிமைப்படுவர். அதுதான் தமிழருக்குத் தேவையா?

**- புதிய நீதி**

### ஐ.நாவில் தமிழர்களை ஏமாற்றும் அனந்தி, ரவிகரன் அம்பலம்

ஒன்றை விளங்க வேண்டும், ஐ.நா என்பது சாப்பாட்டுக் கடையும் அல்ல, சந்தையும் இல்லை, உலகின் உயரிய சபை அதற்கு என சில பண்பாடு, மரபுகள் உண்டு. இதனை இன்றைய தமிழர்கள் பலர் விளங்கத் தவறுவது கவலைக்குரிய விடயமாகும்.



தமிழர் தலைமைகள் 2009இற்கு பிறகு இன்று வரை தமிழர்களுடைய் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் எடுத்துச் செல்கிறார்கள். கடந்த மார்ச் தொடக்கம் இன்றைய 27ஆவது கூட்டத் தொடர் வரை ஐ.நா.வில் அனந்தி தமிழில் உரையாற்று கிறார் ஏதோ உலக சாதனை படைத்துள்ளதாக செய்திகளை பிரசுரிக்கிறார்கள். .பாவம் அறியாத அப்பாவி தமிழ் இனத்தை யார் பார்ப்பது!

கடந்த 15.09.2014அம் திகதி இவர்கள் அங்குள்ள தமிழர்களை மட்டும் வைத்து நடத்தவிருந்த கூட்டமும் ஐ.நா. அதிகாரி களால் நிராகரிக்கப்பட்டதுடன் 17.09.2014 ஆம் திகதி இவர்களின் சார்பில் மொத்தமாக 10 பேர் கலந்துகொண்டனர்.

இதற்கும் மேலாக ரவிகரன் உரையாற்றுவது போல் புகைப்படம் வேறு. இது ஐ.நா.வின் வெளிப்புறத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இதில் யாரும் புகைப்படம் எடுக்கலாம். சுற்றுலாப் பயணிகள் இதில் ஏறி படம் எடுப்பது சாதாரணம். அதையும் தமிழர்களை முட்டாளாக்க இவர்கள் படுத்தும் பாடு. இதனை ஊடகங்கள் கூட உண்மை என உறுதிப்படுத்த முனைவது வேதனைக்குரியது.

மக்களை ஐ.நா.வைக் காட்டி ஏமாற்றுப வர்களின் உண்மை முகத்தை வெளிப்படுத்தி மக்கள்ளை தெளிவுபடுத்துவது இன்றைய காலத்தின் கடமையும், நிலைமையும்..


ஐ.நா. மண்டபத்திற்குள்ளால் நடந்து வருவது ஒரு சாதனையா? 100 பேர் அமரும் பக்க அறைகளில் 10 பேர் அமர்வது ஒரு விடயமா? யாரை ஏமாற்றுகிறார்கள்? ஐ.நா. இன்று பலருக்கு படம் பார்க்கும் திரையரங்காகியுள்ளது....

அப்பாவி மக்கள் இவர்க்ளின் இப்படிப்பட்ட பெறுப்பற்ற வேட்டி, சேலை செய்திகளால் ஏமாற்றப்படுகிறார்கள். இவர்கள் நடத்திய இக்கலந்துரையாடலில் எந்த ஒரு முக்கிய வெளிநாட்டுப் பிரதிநிதியும் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் தமிழர்களுக்கே தமிழர்கள் ஐ.நா. அறையில் கூட்டம் நடத்துவது எவ்வளவு கேலிக்குரிய செயல்.

ஐ.நா செல்வது நானா? நீயா? என்பதல்ல இன்றைய விடயம். யார் வேண்டுமானாலும் ஐ.நா. போய் வெளியே நின்று படம் எடுத்துவிட்டு அறிக்கைவிட லாம் என்றால் அது தமிழ் சமூகத்தை ஏமாற்றிப் படுகுழியில் வீழ்த்தவே உதவும் என்பது மட்டும் உண்மை.

**- ஜே.வி.பி. நியூஸ்**

# திட்டம் போட்டுத் திருடிற கூட்டம்!



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

வழியிற் தேங்காயை எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு அடிக்கிற கைங்கரியம் தமிழ்த் தேசிய அரசியல்வாதியளுக்கு கை வந்த கலை. நீங்கள் பார்த்தீங்களெண்டால் எங்கடை கௌரவ உறுப்பினர்களில் கணிசமான ஆக்கள் பெரும் தனவந்தர்கள். மதுபானசாலை தொடக்கம் எல்லா பிஸ்னஸிலும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலையும் கொடிகட்டிப் பறப்பவர்கள்.

ஆனால் சனங்களுக்கு உதவிறதெண்டால் அது புலம்பெயர்ந்தவர்களுடைய காசிலைதான். புலம்பெயர்ந்த நாடுகளிலை உல்லாச விசிற் அடிச்சுப் போட்டு வாற கௌரவத்துக்குரியவர்கள் அங்கை தொடர்பை வைச்சு கொஞ்சக் கொஞ்சக் காசை வாங்குகிறது.

அங்கை காசு குடுக்கிறவையும் சும்மா ஆக்களில்லை. முன்னொரு காலத்திலை ஆயுதம் வாங்கவெண்டு சேர்த்து, கணக்குப் பாக்க ஆக்கள் இல்லாததாலை மடக்கி வைச்சிருக்கிற காசை கருமங் கழிக்கவென இவர்களிட்டைக் குடுத்து விடுகினை. தங்கடை பேர் வராமல் இருக்கிறதுக்காக ஒரு குழுப் பெயரை சங்கம் எண்ட பெயரிலை வைச்சிருப்பினை.

இவை அதை அள்ளி வாங்கி வந்து, "இந்தச் சங்கம் எமது கௌரவ உறுப்பினருக்கு அன்பளித்த நிதியில் இருந்து..." என்ற அறிவித்தலோடை கிள்ளிக் குடுப்பினை. அதைப் போடுறதுக்கு கொஞ்சப் பேப்பர்களும், இணையத்தளங்களும் இருக்குது.

அதிலை பேப்பர் முதலாளி குடுத்தால் அவற்றை பேப்பரிலை வரும். சிறியண்ணை குடுத்தால் அவற்றை தம்பி நடத்திற மூண்டு நாலு இணையதளத்திலை வரும்.

மற்றவையள் ஒவ்வொரு றிப்போட்டர்ஸை வைச்சிருக்கினை. அதுகள் நல்ல தம்பியள் பாருங்கோ! ஒரு பார்சல் புரியாணியும் கொக்கோகோலாவும் வாங்கிக் குடுத்தால் போதும். அடுத்தநாள் செய்தி வரும்.

எப்பாலும் ஆசை அருமையாய் பிறஸ் கொன்பிரன்ஸ் வைச்சு தண்ணி வார்த்தால் போதும். போதாதற்கு வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் போற நேரம் ஆதரவாளர்கள் குடுக்கிற செல்போன், கமரா இத்யாதிகளிலை விலை குறைஞ்ச ஒண்டைக் குடுத்து ஆக்களைத் தாஜா பண்ணலாம்.

பிரதேச சபைக்காரர் கூட இந்த மாதிரி ஊடக பலத்தோடை இருக்கினையெண்டால் பாருங்கோ. வல்வெட்டித்துறையிலை நகரசபைத் தலைவர் ஒண்டுக்குப் போனாலும் அதை எழுத வைக்க அங்கையுள்ள உறுப்பினராலை முடியுது. வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் தும்மினாலும் அதை துணைத் தலைவர் பத்திரிகையில் போடுவிச்சு கிழிச்சுப் போடுவார். வலி கிழக்கிலையும், வலி.தென்மேற்கிலையும் இரண்டு தலைவர்களை வீட்டுக்கே அனுப்பியாச்சுது.

கொஞ்சக் காலத்துக்கு முந்தி இப்பிடித்தான் ஒரு கௌரவத்துக்குரிய தமிழ்த் தேசியவாதி வெளிநாட்டுக்குப் போன போது ஒரு இருதய நோயாளியின் பரிதாப நிலையைச் சொல்லி எட்டரை இலட்சம் வாங்கினவராம். உண்மைத் தன்மையைக் காட்ட சம்பந்தப்பட்டவருடன் தொலைபேசியிலும் உரையாட வைச்சாராம்.

சில மாதங்கள் கடந்த பிறகு காசு குடுத்த புலம் பெயர் வாசி நாட்டுக்கு வந்து உதவி பெற்றவரைச் சந்திக்கப் போனார். அங்கை போன பிறகுதான் தெரிஞ்சது கௌரவத்துக்குரியவர் 85ஆயிரத்தை மட்டும் குடுத்திருக்கிறார் எண்டு. இவரும் அதுக்குப் பிறகு கௌரவ பா.உ.வைச் சந்திக்க முயன்று முடியாமல் பலருக்கும் புலம்பி விட்டு நாடு திரும்பினார். இப்பிடியும் இருக்குது கதை.

வலி.மேற்கிலை ஏதாவது உதவி குடுக்கிறதெண்டால் பிரதேசசபை அம்மணி கௌரவத்துக்குரிய பேப்பர் முதலாளியைக் கொண்டுதான் குடுப்பிப்பார். அது பேப்பரிலை கலர்புல்லாய் வருமல்லே. மற்றும்படி விளம்பரம் செய்யிறதெண்டால் காணியைத்தான் விக்க வேணும். இது திறமான விளம்பரம். இதுகளும் ஒரு உத்திதான்!

என்ன பகிடியெண்டால் இப்ப அதே ஸ்ரைலை உள்ளூரிலை இருக்கிற சில புள்ளியளும், அமைப்புக்களும் பின்பற்றத் தொடங்கியிட்டுது.


அவர்களும் இப்பிடித்தான்! ஊரிலை இப்பிடி இப்பிடிப் பிரச்சினையள், தேவையள் இருக்குது. அதுக்கு நீங்கள் உதவி செய்ய வேணும் எண்டு வெளிநாடுகளிலை இருக்கிற ஊர்க்காரரைக் கேப்பினை. அவையளும் காசை அனுப்புவினை. இவை இங்கை ஒரு விழா வைச்சு அந்த உதவியளை வழங்குவினை. விழாச்செலவு, வழங்கிய உதவி எண்டு கணக்குக் காட்டுப்படும்.

அவர் சார்பாக இவர் உதவியை வழங்கிப் போட்டு, இவர் உதவி வழங்குகிற படத்தை பேப்பரிலை போடுவிப்பார். விரைவிலேயே இவர் சமூகத் தொண்டன் எனப் பெயரெடுத்திடுவார்.

திட்டம் போட்டுத் திருடிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது.. எண்டு காத்திலை வாத்தியாற்றை பாட்டுக் கேக்குது.. ம்...?




மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய 1008 சங்காபிஷேகம் அண்மையில் வெகு சிறப்பாக இடம்பெற்றபோது... (51)




# நிகழ்வுகளின் பதிவுகள்....

சிற்பக் கலைஞர் அமரர் ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி அண்மையில் திருமறைக் கலாமன்ற சித்திரக்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். வலய சித்திரபாட முதன்மை ஆசிரியர் தி. துஷ்யந்தன் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும், அமரர் ஆனந்தனுக்கு பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதையும் காணலாம்.





ஊறணி இந்து மயானம், மயானக்குழுவின் ஏற்பாட்டில் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டு புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதைக் காணலாம். (116)





திருமதி மைதிலி தயாபரனின் வாழும் காலம் யாவிலும், "சொந்தங்களை வாழ்த்தி" ஆகிய இரு நாவல்கள் வெளியீட்டு விழா நேற்று வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது... (நி)





வடமாகாணத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் கூட்டுறவு கிராமிய வங்கிகளை நவீனமயப்படுத்தல் தொடர்பான பயிற்சி நேற்று முன்தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றபோது.... (நி)

# தமிழ் மக்களுக்காக பணியாற்றவே

# இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் இணைப்பு

## மேஜர் ஜெனரல் அமங்க பொல தெரிவிப்பு



யாழ்ப்பாணம்)

இயல்பு நிலைக்குத்திரும்பியிருக்கும் வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக இந்தப்பிரதேச மக்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வித்திறமைகளுக்கு அமைய தொழில் வசதிகளும் உள்ளன சொந்தப்பிரதேசத்தில் பணிபுரியவே தமிழ் இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தின் பிரதி தலைமை அதிகாரி மேஜர் ஜெனறல் அமங்க் பொல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். காங்கேசன்துறையில் இலங்கை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 500 தமிழ் இளைஞர் யுவதிகளின் பயிற்சி நிறைவை ஒட்டிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த ஏனைய இராணுவத்தினருடன் கைகோர்த்து நீங்கள் செயற்படுவதோடு அபிவிருத்தியிலும் சகோதர மக்களை பாதுகாப்பதிலும் சேவையாற்ற இளைஞர் யுவதிகள் இராணுவத்தில் சேர்ந்துள்ளமை தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ள அவர் பெற்றோருக்கும் தமது நன்றியைத் தெரிவித்ததுடன் இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலம் ஏற்பட வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (பா)

# கோண்டாவில் இந்துக்கல்லூரியில் நவராத்திரி விழா ஏற்பாடுகள்

(யாழ். நிருபர்)

கோண்டாவில் இந்துக்கல்லூரியில் இம்முறை நவராத்திரி விழாவைச் சிறப்பாகச் செய்வதற்கு கல்லூரியின் இந்துமா மன்றம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

நாளை மறுதினம் புதன்கிழமை கும்பம் வைக்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகும் இவ்விழா இறுதி மூன்று தினங்களும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி விஜயதசமி விசேட பூசையும் காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரை வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) நிகழ்வும் இடம்பெறும்.

அன்றையதினம் வெள்ளிக்கிழமை 10.32க்கு இராகுகாலம் ஆரம்பிப்பதால் பெற்றோர் தமது பிள்ளைகளை காலையில் நேரத்துடன் அழைத்து வந்து ஏடு தொடக்கலாம் என அதிபர் தெரிவித்துள்ளார். (10)

# மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு நேற்றும் நேற்று முன்தினமும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கை கிரிக்கற் சங்கம், யாழ்.மாவட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கற் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற யாழ்.மாவட்ட நடுவர்களுக்கான பரீட்சையும் நடாத்தப்பட்டது.

துடுப்பாட்ட விதிகள், சிறப்பு விதிகள் நடைமுறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்களும் செயலமர்வுகளும் இடம்பெற்றன. (17)

# பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களால் சிரமம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை நேரங்களில் யாழ்.குடாநாட்டின் முக்கிய பிரதான வீதிகளில் கனரக வாகனங்கள் அதிகமாக செல்வதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை தினமும் எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பாடசாலை ஆரம்பிக்கும் முடிவடையும் நேரங்களில் பாடசாலைகள் அமைந்திருக்கும் பிரதான வீதிகளில் குறித்த நேர இடைவெளிகளில் கனரகவாகனங்கள் செல்வதை தவிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (66)



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து அண்மையில் சிறுவர் இல்ல மேற்பார்வை செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (90)




## இயந்திர அதிகாரி

தொழிற்சாலைத் திணைக்களத்தின் இயந்திர அதிகாரி III 'ஆ' (இலங்கை தொழில்நுட்ப சேவை) வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளான ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரு அமர்வுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம் அல்லது இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் உட்பட்டதாக மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளிக்கும் அதிகாரசபையால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியலாளர் டிப்ளோமா அல்லது தேசிய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றுகளை வெளிப்படுத்தும் நிறுவனங்களிடமிருந்து இலங்கை தொழில்நுட்ப சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தொழிற்சாலை பொறியியலாளர், அரச தொழிற்சாலை, கொலன்னாவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கான மேலதிக தகவல்களை கடந்த 12.09.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியல் பார்வையிட முடியும்.

## நிறைவேற்று தரத்தில் தயாரிப்பாளர் (அரசாங்க தகவல் திணைக்களம்)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை தரத்தில் தயாரிப்பாளர் (திணைக்களத்திற்கான) பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அரசாங்க தகவல் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் I ஆம் தரப் பதவியில் சேவை புரிபவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை செயலாளர், வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, அசிதிசி, இல.163, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 05 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்கான மேலதிக தகவல்களை கடந்த 19.09.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

## இலங்கை அதிபர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

இலங்கை அதிபர் சேவையின் I, 2-I, 2-II, 3 ஆம் வகுப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இதற்கான மேலதிக தகவல்களை கடந்த 19.09.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

யாழ். நகர் கிளிநொச்சி அறிவியல் நகர் பம்பை மடு போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்களுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. கீழ்வரும் வெற்றிடங்களுக்கு உபகொந்திராத்துக்காரர்கள் தேவை. மேசன், கொந்திராத்துக்காரர் Horm Work கொந்திராத்துக்காரர் கம்பி கொத்திராத்துக்காரர் டைல்ஸ் (Tile) கொந்திராத்துக்காரர் விபரங்களுக்கு கோண்டாவில் 0712579 347, கிளிநொச்சி 0712579327, பம்பைமடு வவுனியா 0712578482 திருநெல்வேலி 0712387106, வவுனியா 0712387076 பொது 0773751803.

எங்கள் ஐரோப்பிய நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. தேவைப்படும் பிரதேசங்கள் அக்கரைப்பற்று, பண்டாரவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களுக்கு ஆண், பெண் தேவை. வயது 18-65 வரை சாப்பாடு, தங்குமிடம் இலவசம் சம்பளம், ஆண்களுக்கு OT யுடன் 35,000, பெண்களுக்கு OT யுடன் 30,000 கொடுக்கப்படும். வரும் நாளிலேயே சேர்க்கப்படுவீர்கள் சாரி உடுத்தும் பெண்களை எதிர்பார்க்கிறோம். தொடர்புகளுக்கு 0774492296

தொகுப்பு:- சி.என்.எச். சாள்ஸ

# ஆளும் கட்சிக்கு அமோக வெற்றி
# போனஸ் ஆசனங்களும் ஆளும் கட்சி வசம்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஊவா மாகாண தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இதனால் பெரும்பான்மை பலத்துடன் ஊவாவில் ஆட்சி அமைக்கவுள்ளது.

ஊவா மாகாண சபைக்கான தேர்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன் முடிவுகள் முழுமையாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதுளை மாவட்டத்தில் 9 ஆசனங்களும், மொனறாகல மாவட்டத்தில் 8 ஆசனங்களுமாக 17 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அத்துடன் 2 'போனஸ்' ஆசனங்களுடன் மொத்தமாக 19 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பதுளை மாவட்டத்தில் கடும் நெருக்கடியைக் கொடுத்து பதுளை மாவட்டத்தில் 8 ஆசனங்களையும், மொனறாகல மாவட்டத்தில் 5 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. இதேபோன்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இரு மாவட்டங்களிலும் தலா ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது. தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்....

## மொனராகலை மாவட்டம் இறுதி முடிவு


| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 140850 | 58.55% | 8 |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 77065 | 32.03% | 5 |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 15955 | 6.63% | 1 |
| OTHERS வேறு கட்சிகள் | 3781 | 1.57% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 2874 | 1.19% | |
| OTHERS மக்கள் நல சேவை முன்னணி | 54 | 0.02% | |


| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 241426 | 94.94% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 12871 | 5.06% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 254297 | 76.42% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 332764 | |

## பதுளை மாவட்டம் இறுதி முடிவு

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 209056 | 47.99% | 9 |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 197708 | 45.38% | 8 |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 20625 | 4.73% | 1 |
| OTHERS வேறு கட்சிகள் | 5045 | 1.16% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 3202 | 0.74% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 441371 | 95.38% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 21398 | 4.62% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 462769 | 75.87% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 609966 | |




# தொகுதி ரீதியிலான முடிவுகள்...

### பதுளை மாவட்டம் - பசறை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 23188 | 56.52% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 16426 | 40.04% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 800 | 1.95% | |
| OTHERS வேறு கட்சிகள் | 488 | 1.19% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 121 | 0.29% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 41267 | 93.68% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2783 | 6.32% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 44050 | 71.13% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 61933 | |

### பதுளை மாவட்டம் - பதுள தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 21099 | 54.23% | |
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 15001 | 38.56% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 2271 | 5.84% | |
| OTHERS வேறு கட்சிகள் | 336 | 0.86% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 199 | 0.51% | |

| | | |
|---|---|---|
| செல்லுப்டியான வாக்குகள் | 39070 | 96.67% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1344 | 3.33% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 40414 | 74.39% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 54327 | |

### பதுளை மாவட்டம் - ஹாலி-எல தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 23900 | 50.39% | |
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 21104 | 44.5% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 1942 | 4.09% | |
| OTHERS வேறு கட்சிகள் | 272 | 0.57% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 211 | 0.44% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 47705 | 94.56% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2746 | 5.44% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 50451 | 73.89% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 68278 | |

### பதுளை மாவட்டம் - ஊவா-பரணகம தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 19127 | 45.2% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 18930 | 44.73% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 2545 | 6.01% | |
| OTHERS வேறு கட்சிகள் | 1160 | 2.74% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 556 | 1.31% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 42682 | 95.47% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2023 | 4.53% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 44705 | 72.19% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 61925 | |

### பதுளை மாவட்டம் - வெலிமடை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 23046 | 45.46% | |
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 22311 | 44.01% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 2485 | 4.9% | |
| OTHERS வேறு கட்சிகள் | 2363 | 4.66% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 492 | 0.97% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 51387 | 96.08% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2094 | 3.92% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 53481 | 72.95% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 73308 | |

### பதுளை மாவட்டம் - பண்டாரவள தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 27365 | 47.72% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 27085 | 47.24% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 2300 | 4.01% | |
| OTHERS வேறு கட்சிகள் | 406 | 0.71% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 183 | 0.32% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 57850 | 95.56% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2690 | 4.44% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 60540 | 73.81% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 82025 | |

### பதுளை மாவட்டம் - ஹபுத்தளை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 21637 | 50.04% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 19297 | 44.63% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 1261 | 2.92% | |
| OTHERS வேறு கட்சிகள் | 812 | 1.88% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 233 | 0.54% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 43609 | 94.18% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2696 | 5.82% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 46305 | 72.2% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 64135 | |

### பதுளை மாவட்டம் - மஹியங்கனை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 32863 | 50.77% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 25956 | 40.1% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 3976 | 6.14% | |
| OTHERS வேறு கட்சிகள் | 1466 | 2.26% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 467 | 0.72% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 64897 | 96.36% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2449 | 3.64% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 67346 | 72.13% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 93387 | |

### பதுளை மாவட்டம் - வியலுவ தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 17650 | 52.25% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 14695 | 43.5% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 958 | 2.84% | |
| OTHERS வேறு கட்சிகள் | 254 | 0.75% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 223 | 0.66% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 33965 | 94.35% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2034 | 5.65% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 35999 | 71.08% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 50648 | |

### மொனராகலை மாவட்டம் - வெல்லவாய தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 56990 | 54.41% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 35580 | 33.97% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 8704 | 8.31% | |
| OTHERS வேறு கட்சிகள் | 2654 | 2.53% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 810 | 0.77% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 105145 | 95.46% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4998 | 4.54% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 110143 | 75.72% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 145459 | |

### மொனராகலை மாவட்டம் - பிபில தேர்தல் தொகுதி


| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 33307 | 62.25% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 16229 | 30.33% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 2957 | 5.53% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 1016 | 1.9% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 54072 | 94.52% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3136 | 5.48% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 57208 | 70.14% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 81564 | |

### மொனராகலை மாவட்டம் - மொனராகல தேர்தல் தொகுதி

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| UPFA ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 44921 | 62.46% | |
| UNP ஐக்கிய தேசியக் கட்சி | 22456 | 31.22% | |
| JVP மக்கள் விடுதலை முன்னணி | 3293 | 4.58% | |
| DP ஜனநாயக கட்சி (தீப்பந்தம்) | 653 | 0.91% | |
| OTHERS வேறு கட்சிகள் | 595 | 0.83% | |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 72173 | 94.24% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4413 | 5.76% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 76586 | 72.43% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 105741 | |



# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான வணிகக்கல்வி

1) பின்வருவனவற்றுள் எது "தனியார் மயமாக்கலின் நோக்கம் அன்று?
   1) அரசாங்க நிதியிடலைக் குறைப்பது
   2) தனியார் துறை முதலீட்டை ஊக்குவிப்பது
   3) வினைத்திறனை அதிகரிப்பது
   4) நுகர்வோர் திருப்தியை அதிகரிப்பது
   5) அரசாங்கப் பொறுப்பைக் கைகழுவிவிடுவது

2) தனியார் துறை, பொதுத்துறை என இரு குழுக்களாக வியாபார நிறுவனங்களை வகைப்படுத்துவதற்கான பிரதான அடிப்படை
   1) நோக்கம்
   2) உடைமை
   3) பங்குபற்றுவோரின் எண்ணிக்கை
   4) அரசாங்க கட்டுப்பாட்டின் தன்மை
   5) சட்டத் தேவைகள்

3) வரையறுக்கப்பட்ட பொறுப்பு என்பதன் பொருள்
   1) எல்லாப் பங்குதாரரும் வியாபாரக் கடன்களுக்குச் சமனான பொறுப்பு உடையவர்
   2) ஒரு வியாபாரத்தில் ஏற்படக்கூடிய கடனின் அளவுக்கு ஒரு எல்லையுண்டு
   3) சொந்தக்காரரின் பொறுப்பு அவரது முதலீட்டின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது
   4) சொந்தக்காரரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.
   5) வியாபார நடவடிக்கைகளில் சொந்தக்காரரின் ஈடுபாடு வரையறுக்கப்பட்டுள்ளது

4) கண்ணியத்தொழில் வியாபாரங்களின் மத்தியில் பங்குடைமை பிரபலம் பெறுவதற்கான பிரதான காரணம்
   1) வித்தியாசமான தேர்ச்சிகளோடு கூடிய ஆட்களைச் சேர்க்கக்கூடிய ஆற்றல்
   2) இலாபங்களையும் நட்டங்களையும் பகிரக்கூடிய ஆற்றல்
   3) குறைவான சட்ட நடைமுறைகள்
   4) பெரிய அளவு மூலதனம் தேவையில்லை
   5) வியாபார இடரை இழிவுபடுத்தக்கூடிய ஆற்றல்

5) பின்வருவனவற்றுள் எது பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின் ஒரு அம்சமாகக் கருதப்படுவது இல்லை.
   1) பங்குதாரரின் இழிவு எண்ணிக்கை 7 ஆக இருக்கவேண்டும்
   2) பங்குச்சந்தையில் பங்குகள் கொள்வனவு செய்யவும் விற்பனை செய்யவும் முடியும்.
   3) பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட வேண்டும்
   4) முகாமையாளரால் பணிப்பாயர் சபை தெரிவு செய்யப்படுகிறது
   5) ஒரு சட்ட ரீதியான ஆளாக இனம் காணும் தன்மை

6) ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியின் வெளித்தொடர்பைக் காட்டும் பத்திரம்
   1) அகவிதிப் பத்திரம்
   2) உருவாக்கல் பத்திரம்
   3) முன் விபரணம்
   4) நியதிச்சட்ட அறிவிப்பு
   5) ஆண்டறிக்கை

7) ஒரு பல்தேசியக் கம்பனி என்பதன் பொருள்
1) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளால் சொந்தமாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனி
2) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஒரு கம்பனி
3) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளும் ஒரு கம்பனி
4) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் ஒரு கம்பனி
5) ஒன்றுக்கு மேற்பட் டநாடுகளில் பொருட்களை விற்கும் ஒரு கம்பனி

8) தனியார் வரையறுக்கப்பட் கம்பனி தொடர்பாகப் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1) ஆகக் குறைந்தது ஒரு பணிப்பாளர் இருக்க வேண்டும்
2) ஒரு பணிப்பாளர் ஆகக் குறைந்தது ஒரு பங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும்
3) பொது மக்களுக்குப் பங்குகளை விற்கும் சாத்தியமில்லை
4) ஆண்டுக் கணக்குகள் கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
5) பங்குச் சந்தையில் பங்குகளைப் பட்டியலிட முடியும்.

9) இலங்கையிலுள்ள கூட்டுறவு இயக்கத்தின் உயர்மட்ட நிறுவனம்
   1) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
   2) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
   3) இலங்கைத் தேசிய கூட்டுறவுச்சபை
   4) இங்கைக் கூட்டுறவு முகாமை நிலையம்
   5) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்

10) இலங்கையில் வியாபாரத் துறையில் அரச கூட்டுத்தாபனங்களை வைத்திருப்பதற்கான பிரதான காரணம்
   1) இலாபகரமற்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவது
   2) அரசாங்கத் தனியுரிமை நிறுவனங்களை உருவாக்குவது
   3) வேலைப் பாதுகாப்பை உறுதி செய்வது
   4) அரசாங்கத்துக்கு ஒரு வருமானத்தைப் பெறுவது
   5) பொருட்கள், சேவைகளுக்கான தரத்தை முன்னேற்றுவது

11) சந்தை மூலதன மயமாக்கல் (உயிவையடணையவழை) என்பதன் பொருள்
1) கம்பனியால் வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் பேரளவுப் பெறுமதி
2) கம்பனியால் வழங்கப்பட்ட ஸ்லாப் பங்குகளினதும் பேரளவுப் பெறுமதி
3) கம்பனியின் பங்கு மூலதனத்தினதும் கடன் மூலதனத்தினதும் பெறுமதி
4) சொந்தக்காரரின் உரிமை மூலதனத்தினது பெறுமதி
5) கம்பனியால் வழங்கப்பட்ட பங்குகளின் சந்தைப் பெறுமதி

12) கைத்தொழில் உறவுகள் என்பதன் பொருள்
   1) ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள உறவு
   2) தொழில்தருனருக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள உறவு
   3) ஊழியர்களுக்கும் தொழில் தருனருக்கும் இடையேயுள்ள உறவு
   4) தொழில்தருனருக்கும் முகாமையாளருக்கும் இடையுள்ள உறவு
   5) ஊழியருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையேயுள்ள உறவு

13) நுகர்வோர் பாதுகாப்பு உறுதிப்படுத்தக்கூடியது
   1) அரசாங்க ஒழுங்குவிதிகளினால்
   2) நுகர்வோர் ஆலோசனைச் சேவைகளால்
   3) வியாபார நடத்தை ஒழுக்க விதிகளினால்
   4) நியமத்தை அத்தாட்சிப்படுத்துவதாலும், லேபல்களினாலும்
   5) மேற்கூறிய எல்லாம்

14) முயற்சியாளன் பற்றிய பூரண கருத்தைத் தரும் கூற்று
1) இலாபம் உழைப்பதற்காக ஒரு வியாபாரத்தில் முதலீடு செய்யும் ஒருவர்
2) ஒரு வியாபார முயற்சியின் முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர்
3) ஒரு வியாபார முயற்சியில் முதலீடு செய்யும் முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர்
4) இடர்களை ஏற்று இலாபம் பெறும் ஒருவர்
5) புதியன புனைதல் மூலம் மாற்றங்களைக் கொணரும் ஒருவர்

15) இலங்கையில் முயற்சியாண்மை அபிவிருத்தியின் பிரதான நோக்கம்
   1) வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது
   2) உள்ளூர் வளங்களின் உபயோகத்தை அதிகரிப்பது
   3) கிராமிய அபிவிருத்தியை விரைவுபடுத்துவது
   4) ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வது
   5) இறக்குமதிகளுக்குப் பதிலீடுகளை மேற்கொள்வது

16) சிறிய வியாபாரங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது
   1) பாரிய அளவுத்திட்ட வியாபாரங்கள் விரும்பாத வியாபாரங்களை மேற்கொள்ள
   2) வேலைவாய்ப்புக்களை விஸ்தரிக்க
   3) உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த
   4) வருமானப் பங்கீட்டின் இடைவெளியை குறைக்க
   5) மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் நிறைவேற்ற

17) பொதுவாக சிறு வியாபாரங்கள்
   1) மூலதனச் செறிவானவை
   2) ஊழியச் செறிவானவை
   3) வினைத்திறனற்றவை
   4) நிதியிட இலகுவானவை
   5) மேற்குறிப்பிட்ட எல்லா அம்சங்களும் அடங்கியவை

18) இலங்கையில் சிறிய அளவு உற்பத்தியாளர்களுக்கு சந்தை வசதிகளை வழங்கும் ஒரு நிறுவனம்
   1) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
   2) இலங்கை நியமங்கள் நிறுவனம்
   3) தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
   4) இலங்கைக் கைப்பணிப் பொருட்கள் சபை
   5) மேற்குறிப்பிட்டவை எல்லாம்

19) பின்வருவனவற்றுள் எது பணத்தின் ஒரு தொழிற்பாடன்று?
   1) பரிமாற்றத்தின் ஓர் ஊடகம்
   2) ஒரு பெறுமதி அளவீடு
   3) வட்டிவீதங்களின் ஓர் அளவீடு
   4) ஒரு பெறுமதிக் களஞ்சியம்
   5) பிற்போடப்பட்ட கொடுப்பனவுக்கான ஒரு வழி

20) ஸ்ரேலிங் பவுண்டுக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணி
1) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான கேள்வி அதிகரிப்பு.
2) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான கேள்வி குறைவு
3) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான நிரம்பல் அதிகரிப்பு.
4) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான நிரம்பல் அதிகரிப்பு.
5) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான நிரம்பல் குறைவு

21) இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம்
1) அரசாங்க வங்கியாகச் செயலாற்றுவது
2) அரசாங்கத்தின் நிதியியல் பிரதிநிதியாகச் செயலாற்றுவது
3) வங்கிகளின் வங்கியாகச் செயலாற்றுவது
4) இலங்கை ரூபாவின் ஸ்திரத் தன்மையைக் காப்பாற்றுவது
5) பணச் சந்தையையும் மூலதனச் சந்தையையும் முன்னேற்றுவது

22) பின்வருவனவற்றுள் எது இலத்திரன் காசாகக் கருதப்படுவதில்லை?
1) வரவு அட்டை (Debit card)
2) உள்நாட்டுக் கடன் அட்டை (Local credit card)
3) யுவுஆ அட்டை ( தொலை அட்டை - teller card)
4) சர்வதேச கடன் அட்டை
5) பிரயாணிகள் காசோலைகள்

23) பின்வருவனவற்றுள் எது வியாபாரி ஒருவருக்கு நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதன் அனுகூலம் அல்ல?
1) காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யப்படமுடியும்
2) மேலதிகப் பற்று வசதிகள் பெறப்படமுடியும்
3) நாளாந்த மீதிக்கு வட்டி பெறப்படமுடியும்
4) ஏனைய திரந்தவரிடம் இருந்து பெறப்படும் காசோலைகள் அக்கணக்கில் வரவு வைக்கப்பட முடியும்
5) நிலையான கட்டளைகளுக்குப் பணம் கொடுக்கப்பட முடியும்.

24) வெளிநாட்டில் வதியும் நண்பர் ஒருவருக்கு ஒரு தொகைப்பணம் அனுப்புவதற்குப் பின்வருவனவற்றுள் எது எளிமையானமுறை
1) தனியாள் காசோலை 2) வங்கியாணை
3) தபால் மூலம் காசு 4) மாற்று உண்டியல்
5) நாணயக் கடிதம்

25) தொடர்பாடல் செய்முறையின் ஒரு மூலமாகப் பின்வருவனவற்று எது கருதப்படுவது இல்லை
1) அனுப்புபவர் 2) விடயம்
3) செலவு 4) ஊடகம்
5) பெறுபவர்

26) பின்வருவனவற்றுள் எத்தொடர்பாடல் ஊடகம் விரைவான பின்னூட்டியைத் தருகிறது?
1) இலத்திரன் தபால் (E-mail) 2) இணையம் (Internet)
3) ரெலெக்ஸ் (telex) 4) பக்ஸ் (Fascimile)
5) தொலைபேசி

27) பின்வருவனவற்றுள் எவ்வூடகம் அகத்தொடர்பாடலிலும் வெளித்தொடர்பாடலிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது?
1) கடிதம் 2). கூட்டம் (Meeting)
3) ஞாபகக் குறிப்பு (Memorandum)
4) பக்ஸ் (fax) 5) சுற்று நிருபம் (Circular)

28) பின்வருவனவற்றுள் எந்நாடு ஆசியான் (ASEAN) இன் அங்கத்தவர் இல்லை?
1) மலேசியா 2) சிங்கப்பூர்
3) தாய்லாந்து 4) ஜப்பான்
5) இந்தோனேசியா

29) பின்வருவனவற்றுள் எது சர்வதேச வர்த்தகத்தின் ஒரு நன்மை இல்லை?
1) பல்வேறு பொருட்களை நுகர்வதற்கு ஒரு வாய்ப்பை வழங்குவது
2) அளவுத் திட்டச் சிக்கனங்கள்
3) சர்வதேசக் கூட்டுறவு
4) குறைவான விலைகள்
5) உயர்வான உள்நாட்டு நுகர்வுச் செலவீடு

30) வர்த்தக மீதி என்பதன் பொருள்
1) நடைமுறைக் கணக்கு மீதி
2) ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்குமிடையேயுள்ள வித்தியாசம்
3) வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்துக்கும் வெளிநாடுகளில் ஏற்படும் செலவுகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்
4) புலனாகும் ஏற்றுமதிகளுக்கும் புலனாகும் இறக்குமதிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்
5) புலனாகா ஏற்றுமதிகளுக்கும், புலனாகா இறக்குமதிகளுக்கும் இடையிலான வேறுபாடு

31) அத்தாட்சிப் பத்திரம் (certificate of origin) முக்கியமானது
1) சுங்கத் திணைக்களத்திலிருந்து பொருட்களைப் பெறுவதற்கு
2) ஒப்பந்தம் செய்யப்படும் சுங்கக் களஞ்சியத்தில் இடம் ஒதுக்குவதற்கு
3) கேள்விக் கட்டணங்களைக் குறைப்பதற்கு
4) தீர்வைக்கழிவு பெறுவதற்கு
5) வங்கி வசதிகளையும் நிதி வசதிகளையும் பெறுவதற்கு

32) ஐரோப்பிய சமூகத்தில் (EC) பயன்படுத்தப்படும் பண அலகு
1) எஸ்.டீ.ஆர் (SDR) 2) யூரோ (EURO)
3) அமெர்க்க டொலர் (US Dollar)
4) யூரோ டொலர் 5) யூரோ பவுண்ட்

33) சில உற்பத்தியாளர்கள் நேர் விற்பனையைத் தெரிவு செய்வதற்கான காணரம்
1) விலைகளின் இழிவு மட்டத்தைப் பேணுவதற்கு
2) சுப்பமாக்கற்றின் பிரபலம்
3) சில்லறை வியாபாரிகள் மிகச் சகதியுள்ளவராக இருப்பது
4) உற்பத்தியாளர்கள் மொத்த விற்பனைத் தொழிலில் ஈடுபட விரும்புவது
5) நுகர்வோர் நிறுவனங்கள் மிகத் தீவிரமாகச் செயற்படுவது

## பகுதி II

1) தனியார் உடைமை, பொது உடைமை என்பவற்றின் கீழுள்ள வியாபார நிறுவனங்களின் பல்வேறு வகைகளைக் காட்டும் ஒரு வரைபடத்தை வரைக.

2) தனியுடைமை வியாபாரம், பங்குடைமை என்பவற்றில் இருந்து தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் வேறுபடும் ஆறு வழிகளைப் பெயரிடுக.

3) சரத்து சந்தருவான் ஒரு உணவு விடுதியை முகாமை செய்யும் ஒரு தனியுடைமை வியாபாரி ஆவர். அவர் தனது வியாபாரத்துக்கு குடிபுடி (பழுழன - கழுனல) என்று பெயரிடத் தீர்மானிக்கின்றார். அவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

4) அரசாங்கத் திணைக்களங்களோடு ஒப்பிடுகையில் பொதுக் கூட்டுத்தாபனங்களின் நன்மைகள் யாவை?

5) ஒரு வியாபார நிறுவன வடிவம் என்ற வகையில் கூட்டுறவுகளின் விசேட பண்புகள் யாவை?

---

1) அனுமதி பெற்ற முகவர் வியாபாரம் ஒன்றில் அனுமதி பெறுபவருக்கும் (franchisee) அனுமதி கொடுப்பவருக்கும் (Franchisor) கிடைக்கக்கூடிய நன்மைகள் மூன்றை ஒவ்வொருவருக்கும் பெயரிடுக.

2) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு முதலீட்டாளர் பெறக்கூடிய நன்மைகள் யாவை?

3) 1990 களைப் பசுமைச் சகாப்தம் என அழைக்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு வியாபாரிகள் எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என விளக்குக.

04) ஒரு தீ அபாயகாப்புறுதி ஒப்பந்தத்தின் மூலன் வியாபாரி ஒருவர் பூர்த்தி செய்யக்கூடிய இடர்கள் எவை?

05) இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாளர்களின் பற்றாக்குறை ஒரு தடையாகும் எருத்துரை செய்க

06) ஒரு முயற்சியாளனின் ஆறு முக்கிய பண்புகளைப் பெயரிடுக

07) ஒரு சிறிய வியாபாரத்தை அரம்பிக்கும்போது ஒரு முயற்சியாளனால் பெறக்கூடிய மூன்று நன்மைகளைப் பெயரிடுக.

08) இலங்கையின் மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட சுரத்துர (Surathura) நிகழ்ச்சித் திட்டத்தை விளக்குக.

09) அரசாங்கத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவை

10) மாற்றுண்டியல் என்றால் என்ன? ஒரு ஏற்றுமதியாளனுக்கு அது எவ்வாறு உதவுகிறது

11) உலக வியாபார அமையத் (world trade Organization) தின் பங்கினை விளக்குக.

12) இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் தமது இடர்களை இழிவாக்குவதற்கு உதவும் மூன்று நிறுவனங்களைப் பெயரிட்டு ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்படும் ஒரு தொழிற்பாட்டைப் பெயரிடுக.

13) **சிறுகுறிப்புக்கள் எழுதுக**
அ) எதிர் வர்த்தகம் (counter Trade)
ஆ) சுமைச்சீட்டு
இ) நாணயக் கடிதம்



## பரமர் சங்கமம்

'கலை கலைக்காகவா மக்களுக்காகவா" எண்ட கோஷம் 1960 களில் ஈழத்து தமிழ் இலக்கியப் பரம்பில் வீறுகொண்டெழுந்தது. கலை மக்களுக்காக எண்மொரு பிரிவும், கலை கலைக்காக எண்ட மற்றொரு பிரிவும் வாரிக் கட்டிக் கொண்டு போட்டிபோட்டிச்சினம்.

அந்தப் போடியளலை 1960 களில் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் போன்ற படைப்புகள் புற்றீசல்கள் போலை சிறகு கட்டிப் பறந்தன அதால் அக்காலத்தில் எழுந்த நவீன இலக்கியப் படைப்புகள் இன்றைக்கு வரையும் எமது இலக்கிய உலகத்தைக் தூக்கி நிறுத்தியுள்ள தெண்டால் புளுகில்லை.

கே.டானியல் டொமினிக் ஜீவா, எஸ்.அகஸ்தியர், செ.யோகநாதன், செ.கணேசலிங்கம், செ.கதிர்காமநாதன் போன்றோர் கலை மக்களுக்காக வெண்டும் வரதர் அ.செ.முருகானந்தன் கனக செந்திநாதன், செங்கை அழியான், செம்பியன் செல்வன் போன்றோர் கலை கலைக்காக எண்ட அணிகளில் நிண்டு உழைத்ததால் எங்கடை இலக்கியப் பரப்பு பசுமையாகக் காட்சி தந்தது.

இப்ப அந்த எந்தச் சலசலப்பும் இல்லாமல் ஓய்ந்து போயுள்ளதால் எனது நாட்டில் வெளியிடப்படுகின்ற வார இதழ்கள், சஞ்சிகைகள் தரமான ஈழத்து படைப்புகளை வெளியிட முடியாமல்திணறிப் போகின்றன. அந்தக் காலம் போலில்லாமல் இப்ப வெளிவரும் இதழ்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்துள்ளது.

வாரம் தோறும் சாராசரிப் பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பிரசுரமாகி வருகின்றன. அதற்கு வேண்டிய கதைகளைப் பெறுவதற்கு முக்கிய பெரிய வார இதழ்களைத் தவிர ஏனையவை இரவல் எடுத்தே பிரசுரித்து வருவதைக் காணலாம்.

அதனால் கதைக்களம் ஊடாரும் பாத்திரங்கள் எண்டில்லாமல் கருப்பொருள் உரைநடை எல்லாமே அந்நியப் பட்டுக் காணப்படுகின்றன. சில இதழ்கள் எழுத்தாளர்களின் பெயர்களைப் போடுவதில்லை போட்டால் எழுத்தாளர் இலங்கைப் படைப்பாளிகள் அல்லர் என்ற உண்மை தெரிந்துவிடுமென்று அஞ்சியே படைப்புக்களை 1960 களில் வெளியிட பத்தாதகளமிருந்தது. இப்போ களம் பெருகியும் புதிய படைப்பாளிகள் உருவாகாமல் இருக்கக் காரணமென்ன தொலைக்காட்சி மின்னஞ்சல் பேஸ்புக் போன்றன தோன்றியதால் அவற்றைப் பயன்படுத்துவதும் வாசிப்புக் பழக்கம் குறைந்து போனதும் காரணங்களல்ல.


எழுத்தாளர்களை உருவாக்கும் பயிற்சிப் பட்டறைகள் இல்லாமலேயே இவ்வேளை சமீபத்தில் எமது பெண் எழுத்தாளரும் உளவியல்துறை அறிஞரும் நாடகவியவாளருமான கோகிலமகேந்திரன் இணுவில் பகுதியில் அத்தகை பயிற்சிப் பட்டறை நடத்த முற்பட்டதை ஊடகங்களில் அறிய முடிந்தது.

அதுமட்டும் இல்லாமல் அவரது இலக்கிய வட்டம் வெளிநாட்டில் அவர் இருக்கும் பொழுது நேரடிச் சிறுகதைப் போட்டி ஒன்றையும் நடத்திப்புதுமை ஒன்றையும் செய்திருந்தது. இத்தகைய இலக்கிய ஆர்வலர் இன்னமும் சிலபேர் அங்காங்கே பயிற்சிப் பட்டறைகள் போட்டிகளை நடாத்தி ஈழத்து எமது இலக்கியப் படைப்புகள் வளர உரம் ஊட்ட வேண்டுமென்பது பரமர் கேட்டால் நீங்க என்னத்தைச் சொல்லுவியள் ... சொல்லுங்க பாப்பம்..

# கணனியூடாக கற்றல், கற்பித்தல் செயற்பாடு

# வடமாகாணத்தில் 24 பாடசாலைகள் தெரிவு

## வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

கணனி மூலம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென வடமாகாணத்தில் 24 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிபர் அறை, கணினி கூடம் கையளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேலும் அதிகரிப்பதற்கு பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். யாழ். மாவட்டத்தில் சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கு கணினி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அதன் மூலம் அந்த மாணவர்கள் கூடுதலான நனமைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதனை அம் மாணவர்களின் பெறுபேறுகளை வைத்து எங்களால் அவதானிக்க முடிந்தது.

அதுபோல ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாறு கணனி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எமது அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதற்காக மாகாணத்திலுள்ள 24 பாடசாலைகளை தெரிவு செய்திருக்கிறோம். அதில் இந்த தண்ணீரூற்று இந்து கலவன் பாடசாலையையும் உள்வாங்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளரை கேட்டுள்ளேன்.

எனவே, ஆசிரியர்கள் கணனி பற்றிய அறிவுகளை பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயத் தேவையாகவுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாத விடுமுறையின் போது ஆசிரியர்கள் கணனி பற்றிய கற்கைகளில் ஈடுபடவேண்டும். அப்போது தான் எமது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும்.

அத்துடன், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதுமட்டுமன்றி, பிரதேசம், தமிழர் பாரம்பரிய விழுமியங்கள் என்பனவற்றை எப்போதும் எடுத்துக் கூறவேண்டும் என்றார்.

பாடசாலை அதிபர் க.குகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் உ.முனீஸ்வரன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.கனகரத்தினம், செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகர் தொழிலதிபர் ந.உதயகரன் (அவுஸ்ரேலியா) உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வவுனியா மாவட்டத்தில் வறட்சி நிவாரண விநியோகம்



வவுனியா மாவட்டத்தில் வறட்சியால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு உருளைக் கிழங்குகள் விநியோகிக்கப் படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் ரி.என். சூரியகுமார் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்ட கால வறட்சியால் பல குடும்பங்கள் வறட்சியால் பாதிப் படைந்துள்ளன. இந் நிலையில் பல கிராமங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வறட்சியால் பாதிப்படைந்த கிராமங்கள் மற்றும் மக்களின் விபரங்கள் பிரதேச செயலக மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் கோரப்பட்டு அதன் அடிப்படையில் அவர்களுக்கு உருளைக்கிழங்குகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு குடும்பத்துக்கு 5 கிலோ கிராம் வீதம் சுமார் 10000 குடும்பங்களுக்கு இவ்வாறாக உருளைக் கிழங்குகள் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது எனவும அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியப் பிரஜைகள் ஏழு பேர் கைது



சுற்றுலா விசாவில் இலங்கை வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏழு இந்தியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை - நாயபட்டிமுனை பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையே குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாக கல்முனை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்களை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

# முதுபெரும் தமிழ் அறிஞர் வைத்தீஸ்வரக் குருக்களின்

## அவருக்கு இன்று அகவை தொன்னூற்று ஒன்பது



ஈழத்தின் முதுபெரும் தமிழறிஞரான பண்டிதர் கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள் இன்று திங்கட்கிழமை 22 ஆம் திகதி தனது 99 ஆவது அகவையில் கால்பதிக்கிறார்.

ஈழத்துச் சிதம்பரம் திருக்கோவிலில் முதன்மைக் குருக்களாக பல ஆண்டுகளாகப் பணிபுரிந்த கணபதீஸ்வரக் குருக்களின் அருந்தவப் புதல்வராக 1916 செப்ரெம்பர் 22 ஆம் திகதி காரைநகரில் அவதரித்தார்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்ற இவர் மகாவித்துவான் சி.கணேசையரிடம பண்டிதர் கல்வி பெற்று திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியராக 1940 இல் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் தனது ஆசிரியர் சேவையை ஆரம்பித்தார்.

1940 இல் காரைநகர் மணிவாசகர் சபையையும் 1960 இல் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் நிறுவி சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டுகள் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம் காரைநகரில் சைவ சமய வளர்ச்சி, தொடர் மொழிக்கு ஒரு மொழி, க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பல்வேறு தமிழ்மொழிப் பயிற்சி நூல்களையும் எழுதி வெளியிட்டு வந்தார்.

ஈழத்துச் சிதம்பரபுராணம் திருமுறைப் பெருமை, திண்ணபுர அந்தாதிதிக்கை அந்தாதி, நன்னூற்காண்டிகை உரையும் நாவலர் பெருமானும் நாவலர் பிள்ளைத் தமிழ் அருள் நெறித் திரட்டு, தெரிநிலை வினையெச்சம் வினைத்தொகை உட்பட பல்வேறு இலக்கான இலக்கிய நூல்களையும் பதிப் பித்து வெளியிட்டார்.

இலங்கைக் கம்பன் கழகம் இவருக்கு 1995 இல் மூதறிஞர்" விருது அளித்து கௌரவித்தது. ஈழத்துச் சிதம்பரபுராண நூல் பதிப்புக்குரிய சிறப்பு விருதுச் சான்றிதழ் இலங்கை அரசால் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

தனது 97 ஆவது வயதில் சைவக் களஞ்சியம் என்ற அருமையான நூல் ஒன்றை வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தின் ஊடாக வெளியிட்டு வைத்தார்.

வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் இவரால் எண்பது ஆண்டுகளுக்கு மேலாக தேடிச் சேகரிக்கப்பட்ட மேற்பட்ட கிடைத்ததற்கரிய மூவாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் பொதுமக்கள் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

நூறாவது வயதை அண்மிக்கும் இவரிடம் தினமும் பல் கலைக்கழக அறிஞர்கள் ஆய்வாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் சென்று அறிவுரைகளும் ஆலோசனைகளும் பெற்று வருகின்றனர். ஐயா அவர்கள் நீண்ட காலம் பூரண சுகத்துடன் வாழ்ந்து எதிர்கால சந்ததிக்கு உதவும் நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ ஈழத்துச் சிதம்பர திண்ணடித் திருகூத்தனை வேண்டி நிற்கின்றேன்.

நடராசா கணேசமூர்த்தி

# சிரியா மீது தாக்குதல் தயாராகும் அமெரிக்கா

சிரியாவில் உள்ள இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்) தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தத் தயார் நிலையில் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து, தலைநகர் வொஷிங்டனில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ஈராக்கில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில், ஈராக் இராணுவத்துக்கு அமெரிக்கா உதவி செய்தது. ஆனால், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது நேரடித் தாக்குதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் அமெரிக்க அதிபர் ஒபாமா தெளிவாக வுள்ளார்.


சிரியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். மீது எப்போது தாக்குதல் நடத்தப்படும் என்ற விவரத்தை இப்போது வெளியிட முடியாது. தாக்குதலுக்கு முன்பாக, எந்த மாதிரியான வியூகங்கள் தேவைபடும் என்பதையும் தெரிவிக்க முடியாது. ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் பயங்கரவாதிகளை ஒடுக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். எங்களின் முயற்சிகளுக்கு சர்வதேச அளவிலான ஆதரவைத் திரட்டி வருகிறோம். எங்களுடைய முயற்சிக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

ஈராக்கில் உள்ள தீவிரவாதிகளுக்கு எதிராக எங்களுடன் இணைந்து, பிரான்ஸ் விமானப் படை தாக்குதல் நடத்தி வருகிறது. இதேபோன்று, அந்தப் பகுதியில் உள்ள வேறு சில நாடுகள், சிரியா மீதான தாக்குதலுக்கு உதவி செய்வதாக தெரிவித்துள்ளன. அந்தத் தாக்குதல் ஒரே தலைமையின் கீழ், ஒருங்கிணைந்த சர்வதேச அணியின் தாக்குதலாக இருக்கும். எங்களுடன் இணைந்து செயல்படத் தயாராக உள்ள வேறு நாடுகளையும் வரவேற்கிறோம் என்று சூசன் ரைஸ் கூறினார்.



# உலக மக்கள் தொகை 2100 இல் 1100 கோடியாகும் ஆய்வில் தகவல்

(வெஷிங்டன்)



உலகம் முழுவதும் வசிக்கும் மக்கள் தொகை வருகிற 2100 ஆம் ஆண்டில் 1100 கோடியை எட்டும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள வொஷிங்டன் பல்கலைகழகம் நடத்திய ஆய்வில மக்கள் தொகை குறித்து புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் ஆராய்ச்சியாளர்கள் கணிப பின்படி அடுத்த சில ஆண்டுகளுக்கு மக்கள் தொகை உயர்வு குறைவாக இருக்கும். அடுத்த நூற்றாண்டு தொடக்கத்தில் மக்கள் தொகை வளர்ச்சி 900 கோடியாக அதிகரிக்கும். தற்போது உலக மக்கள் தொகை 700 கோடியாக உள்ளது. தற்போது உலகம் முழுவதும் காணப்படும் தீவிரவாதம், இயற்கை அனர்த்தம் காரணமாக இந்த நூற்றாண்டில் மக்கள் தொகை வளர்ச்சி எப்படி இருக்கும் என்று கூற இயலாது.

ஆனால் ஆபிரிக்கா நாடுகளில் 2100இற்குள் 5 பில்லியன் மக்கள் தொகை உயரும். மொத்தமாக உலகம் முழுவதும் உள்ள மக்கள் தொகை எண்ணிக்கை 2100ஆம் ஆண்டில் 1100 கோடி வரை உயரும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கருத்தடை மற்றும் பெண் கல்வி இவற்றின் மூலமாகவே ஓரளவுக்கு மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# வெள்ளத்தால் காஷ்மீரில் அப்பிள் உற்பத்தி பாதிப்பு



காஷ்மீரில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் 1000 ரூபா கோடி மதிப்புள்ள அப்பிள் பயிர்கள் நாசமாகியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீர் அப்பிள் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.ஆனால், இந்த ஆண்டு காஷ்மீரில் பாரமுல்லா, குப்வாரா மற்றும் சோபோர் ஆகிய மாவட்டங்களில் 1000 ரூபா கோடி மதிப்பிலான அப்பிள் பயிர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

அப்பிள் பயிர்கள் கடுமையாக சேதமடைந்ததால் காஷ்மீரில் இருந்து செல்லும் அப்பிள்கள் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், உலகளவில் அப்பிள் உற்பத்தி செய்வதில் இந்தியா 11ஆவது இடத்தில் உள்ளது. குறிப்பிடத்தக்கது.

# தகராறில் ஈடுபட்ட நபர் "ஹீல்ஸ்"ஆல் அடித்துக்கொலை

## பிரான்ஸில் சம்பவம்



பிரான்ஸ் நாட்டில் வாடகை வாகன ஓட்டுநர் ஒருவரை இரு பெண்கள் தங்களது பெரிய குதி உயர்ந்த பாதணிகளால் (high heels) அடித்து கொலை செய்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் கடந்த வாரம் ஒரு நாள் நள்ளிரவில், குடிபோதையில் இருந்த இரண்டு பெண்கள் மற்றும் ஒரு ஆணும் வாடகை வாகனம் ஒன்றில் ஏறியுள்ளனர். பின்னர் திடீரென இவர்களுக்கும் வாடகை வாகன ஓட்டுநருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த பெண்கள் இருவரும் 56 வயதான குறித்த ஓட்டுனரை தங்களது பாதணிகளால் அடித்து காயபடுத்தியுள்ளனர். இதனையடுத்து ஓட்டுனரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்த போது, அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

எனவே 25 முதல் 28 வயதுக்குட்பட்ட அந்த மூன்று பயணிகளையும் தற்போது பொலிஸ் காவலில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

# பிலாவல் பூட்டோவின் கருத்து உண்மைக்கு புறம்பானது



பிலாவல் புட்டோவின் கருத்து உண்மைக்குப் புறம்பானது என இந்தியா கருத்து தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பேசியதாவது, அவரது (பிலாவல் புட்டோ) கருத்து, யதார்த்த நிலைக்குப் புறம்பானது. அவரது கருத்து, கடந்த நூற்றாண்டுக்கு நம்மைக் கொண்டு செல்கிறது.

பிலாவலின் பேச்சு, பக்குவமில்லாதது, சிறுபிள்ளைத்தனமானது. காஷ்மீர், இந்தியாவின் ஒரு பகுதி. அது எப்போதும் இந்தியாவின் பகுதியாகவே இருக்கும்.

காஷ்மீர் தொடர்பாக விவாதம் நடத்துவதை பா.ஜ.க. ஒரு போதும் ஏற்காது. காஷ்மீர், இந்தியர்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்றுள்ளது என்றார்.

# சீனாவில் ஆபாசத்தை ஒழிக்க 18 இலட்சம் இணையங்கள் முடக்கம்



ஆபாச படங்கள், விபசார தகவல்களை பறிமாறும் சுமார் 18 இலட்சம் இணையதள முகவரிகளை சீன அரசு மூடியுள்ளது.

இணையதளத்தில் பரவும் ஆபாசத்தை கட்டுப்படுத்த சீன அரசு கடந்த ஏப்ரல் மாதம் முதல் பல்வேறு நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

அதன்படி இணையதளம் மூலமாக தவறான செயல்கள் இடம்பெற்றுவந்தன.அவை கடுமையான குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. சீனாவில் செயல்படும் இணையதள நிறுவனங்களும், அரசின் வேண்டுகோளை ஏற்று சுய பரிசோதனை செய்து கொண்டு, தங்களது இணையதளங்களில் இடம் பெற்றிருந்த ஆபாச படங்களை அகற்றியுள்ளன.

இதுதவிர சீன அதிகாரிகள் கட்டாயமாக பல இணையதளங்களை மூடியுள்ளனர். ஆக மொத்தம் 18 இலட்சம் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக சீனா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# ஸ்கொட்லாந்துக்கு அதிகாரப்பகிர்வு

## கோர்டன் பிரவுண்உறுதியளிப்பு



ஸ்கொட்லாந்தின் சுதந்திரக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கு முன்னர், வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என பிரித்தானிய முன்னாள் பிரதமர் கோர்டன் பிரவுண் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஸ்கொட்லாந்து சுதந்திரம் பெற வேண்டுமா என்ற கேள்வியின் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இதில் வாக்களித்த பெரும்பாலான வாக்காளர்கள், ஸ்கொட்லாந்து ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

கருத்துக்கணிப்பில் சுதந்திரத்திற்கு எதிராக வாக்களிக்கும் பட்சத்தில், ஸ்கொட்லாந்துக்கு கூடுதலான அதிகாரப்பகிர்வை வழங்கப்போவதாக அவர்கள் உறுதியளித்தார்கள்.

இந்த அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக களமிறங்கிய கோர்டன் பிரவுண், அதிகாரப் பகிர்வு நடைமுறைக்கான கால அட்டவணையை முன்மொழிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் நர்த்தனாஞ்சலி நடன நிகழ்வு



(வவுனியா)

இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையுடன் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியினால் ஆற்றுகை செய்யப்படும் மாபெரும் நடன நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு வவுனியா நகர சபை புதிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி அகளங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கமும், கௌரவ விருந்தினராக இந்தியப் பிரதித் துணைத்தூதுவர் சு.தண்சணாமூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன், வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.அன்ரன் சோமராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிருத்திய நிகேதன நுண் கலைக் கல்லூரியின் 100 மாணவர்கள் வரை இந்தக் கலை நிகழ்வில் நடன அளிக்கை செய்தனர். இந்த நிகழ்வில் கலை ஆர்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# பளை மத்திய கல்லூரியில் பாரிய சிரமதானப் பணி



பளை மத்திய கல்லூரி வளாகத்திற்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டுமானப் பணிகள் யாவும நிறைவடைந்த நிலையில் அதற்கான அங்குரார்ப்பண நிகழ்விற்கான முன்னோடியாக, சிரமதானப்பணி நேற்று நடைபெற்றது.

காலை 9.00 மணிமுதல் பளை மத்திய கல்லூரி வளாகத்தினுள் பெற்றோர், பழைய மாணவர்கள், மாணவர்கள். ஆசிரியர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் இணைந்து பாரிய சிரமதானப்பணிகளை மேற்கொண்டனர்.

இப் பணியில் பாடசாலையின் அழிவடைந்த நிலையில் காணப்பட்ட கட்டடங்கள், கனரக வாகனம் கொண்டு இடிக்கப்பட்டு பத்துக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள் மூலம் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. (37)

## மக்களுக்கான...

வடமாகாண சபைத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கொண்டு இன்று ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

இதுவரையில் எம்மால் மக்களுக்குச் செய்ய முடிந்த விடயங்களைச் செய்துள்ளோம் என்ற ஆத்மதிருப்தி எமக்கு ஏற்பட்டுள்ளது. முழுமையாகச் செய்யக்கூடிய புறச்சூழல் அமையவில்லை. இன்னும் நிறையவே செய்திருக்கலாம் என்ற ஆதங்கமும் எம்மிடம் உள்ளது.

வடமாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் நாம் போராடி பெற்றது. எமது முயற்சிக்கு கிடைத்த வெற்றி இது.

நாம் அரசோடு சாராத கட்சி என்பதால் எல்லாவற்றையும் செய்யமுடியவில்லை. அதற்காக நாம் இதுவரையில் எதையும் செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த நியதிச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை எமக்கு கிடைத்த பெரு வெற்றி.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணமாக அறிவிக்கப்பட்டு அதற்கான தேர்தல் 1988 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. தேர்தல் நடத்தப்பட்டு இரு வருடங்களில் மாகாண சபை கலைக் கப்பட்டது.

இதன் பின்னர் 2006ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீதிமன்ற தீர்ப்பினூடாக பிரிக்கப்பட்டன. 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் சர்வதேசத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களால் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வடமாகாண் சபைத் தேர்தல் நடத்தப்பட்டிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஊவா மாகாணசபைத்

வீதமான வாக்குகளுடன் 7 ஆசனங்களையும், ஜே.வி.பி. ஒரு ஆசனத்தையும், மலையக மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தைய்யும் வென்றிருந்தன.

குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் ஆளுங்கட்சி வென்றிருந்த வாக்குகளில் இம்முறை 21 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு 18 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த தென் மாகாணசபை மற்றும் மேல் மாகாணசபை தேர்தல் முடிவுகளிலும் இதுபோன்ற நிலையே காணப்பட்டது.

சரத் பொன்சேகா தலைமை யிலான ஜனநாயகக் கட்சி ஊவா மாகாணத் தேர்தலில் முதற் தடவையாக போட்டியிட்ட போதிலும் ஒரு ஆசனத்தைக் கூடப் பெறமுடியாமல் தோல்வியடைந்துள்ளது.

இதே நிலையே முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து கூட்டாக ஜனநாயக தேசிய முன்னணியின் கீழ் வேட்பாளர் களை நிறுத்திய முஸ்லிம் அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. (முழுமையான விபரம் பக்கம் 14 இல்)

## ஜனாதிபதி...

அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். பல மில்லியன் ரூபா பணம் இந்த விசாரணைக்காக செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 17 ஜனாதிபதி ஆணைக் குழுக்களை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறுவியிருந்தார் எனத் தெரிவித்துள்ளார். இந்த ஆணைக்குழுக்களுக்காக 272 மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளதாகக் குறிப் பிட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில், ஜனாதிபதியினால் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடத்தல்கள், காணாமற் போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தவும் பல்வேறு ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்ட போதிலும், அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

## விசேட...

மொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளார். இந்த வாரம் நியூயோர்க்கில் இடம் பெறவுள்ள 69ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தனது பங்குபற்றுதலுக்கு முன்னதாக ஜனாதிபதி இந்த இணையத் தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

பின்வரும் முகவரியினூடா இந்தப் புதிய தளத்தை அணுக முடியும். http://unga.president.gov.lk

1955இல் உறுப்பினரானமையிலிருந்து இலங்கையானது எல்லா ஐக்கிய நாடுகள் முறைமைகளோடும் தொடர்புபட்டு வந்துள்ளதுடன், அதனைத் தொடர்ந்தும் வருகிறது.

ஐக்கிய நாடுகளில் ஜனாதிபதியின் பணிகளினதும், பல்வேறு ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுடன் அரசாங்கத்தின் இணைந்த செயற்பாடுகளினதும் சேமிப்பிடமாக இந்த இணையத் தளம் அங்குரார்ப் பணம் செய்யப்படுகிறது.

69ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் தொடர்பான, நியூயோர்க்கில் இடம்பெறும் ஏனைய உத்தியோகபூர்வ நிகழ்வுகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் மும்மொழிகளிலும் உரிய காலத்தில் இந்த இணையத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# நூல் வெளியீடு

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் 'யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும், மறைந்தவையும்' நூல் வெளியீடு நேற்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நூல் ஏற்பாட்டுக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எஸ். சண்முகலிங்கம் வெளியிட்டு வைக்க, முன்னாள் அதிபர் வி. கே. தர்மராஜா முதற்பிரதியினைப் பெற்றுக் கொண்டார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில், விகடகவியும் யாழ். மாவட்ட ஓய்வு பெற்ற நீதிபதியுமான மு.திருநாவுக்கரசு மற்றும், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (25)

# சர்வதேச அமைதி தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

சர்வதேச அமைதி தினம் நேற்று வவுனியா மாவட்ட தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா அந்தணர் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள் தலைமையில் வவுனியா பொது மண்டப வீதி, கருமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விசேட வழிபாடுகள் மற்றும் நாட்டில் அமைதி வேண்டி பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சமூக ஆர்வலர்கள் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# சீனி உற்பத்தியை மேம்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

சீனி உற்பத்தியினை மேம்படுத்த சீனி கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைய கந்தளாய், ஹிங்குராணை, செவனகல மற்றும் பல்வத்த சீனி தொழிற்சாலைகளின் உற்பத்தியினை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்தியை .40 சதவீதத்தால் அதிகரிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்ற வகையில், கந்தளாய், ஹிங்குரானை, செவனகல, மற்றும் பல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளுக்கு சொந்தமான கரும்புச் செய்கைக் காணிகள் 99 வருடக் குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்படவுள்ளன.

## பாதிக்கப்பட்ட...

கழும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரிக்கையினை விடுத்ததோடு கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கை கடற்றொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து கடந்தவாரமும் அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நல்லிணக்க...

அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முழு அளவில் மனித உரிமைகளை அனுபவிக்கவும் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்யவும் சமாதானம் முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

## 24 வருடங்களின்...

தற்போது புனரமைப்பு பணிகள் முடிவுற்று பரீட்சார்த்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற யாழ்தேவி ரயில் வெள்ளோட்டத்தை ரயில் பாதை ஓரங்களில் மக்கள் நின்று பார்வையிட்டனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தில் 500 இற்கும் அதிகமான பொதுமக்கள் யாழ்தேவியை வரவேற்க மணிக்கணக்காகக் காத்து நின்றனர்.

## தேசிய ரீதியான...

இதன்மூலம் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள எந்தவொரு தேசிய ரீதியான தேர்தலையும் எதிர்கொள்வ தற்கான வாக்கு வங்கியை தக்கவைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

ஊவா தேர்தல் முடிவுகள் குறித்து திருப்தியடைகின்றோம். மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் யாவும் தற்போது நடத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு வருடங்களின் பின்னரே மீண்டுமொரு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்.

வடக்கு, கிழக்கு உட்பட நடந்து முடிந்துள்ள சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களில் மொத்தமாக 49 இலட்சத்து 44 ஆயிரத்து 572 வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் குறிப்பிட்டார்.

# சர்வதேச பாடசாலைகளை கண்காணிக்க விசேட பிரிவு

## உருவாக்குகிறது கல்வி அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் இயங்கிவரும் சர்வதேச பாடசாலைகளின் பாடத்திட்டம் தொடர்பாக கண்காணிப்பை மேற்கொள்வதற்காக் விசேட கண்காணிப்புப் பிரிவொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸநாயக்க தெரிவித்துள்ளதாவது,

உருவாக்கப்படவுள்ள கண்காணிப்புக்குழு கல்வியமைச்சிற்கும் சர்வதேச பாடசாலைகளுக்கும் இணைப்பாளராக செயற்படும்.

சர்வதேச பாடசாலைகளில் கற்கும் இலங்கை மாணவர்களுக்கு இலங்கை வரலாறு, அவர்களது தாய்மொழி தொடர்பாக பாடத்திட்டங்களை சேர்க்க வேண்டுமென அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஆரம்பமாக வேண்டும்.

இது ஒரு அடிப்படை நடைமுறையாகும். எனினும் நாம் இந்த பாடசாலைகளை கட்டுப்படுத்த மாட்டோம். பெருமளவு பாடசாலைகள் வியாபாரத்திற்காகவே பதிவுகள்ள மேற்கொண்டுள்ளன. ஆனால் குறித்த பாடசாலைகளில் கற்கும் உள்ளூர் மாணவர்களின் நலன்கருதி இந்த பாடசாலைகளை கண்காணிக்கவுள்ளோம். எனவே கண்காணிப்புக் குழுவை விரைவாக ஆரம்பிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பல சர்வதேச பாடசாலைகள் கலாசார விழுமியங்களை பின்பற்றாததுடன், தமக்குத் தாமே சட்ட விதிகளை உருவாக்கி எவருக்கும் அது தொடர்பாக பதிலளிப்பதில்லை என கிடைத்த பல முறைப்பாடுகளை அடுத்தே மேற்கண்ட நடவடிக்கையை கல்வி அமைச்சு எடுக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## போரால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை சந்திக்க ஆர்வம்

### என்கிறார் கௌஷல்

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு ஆர்வமாக உள்ளதாக இந்திய மனித உரிமை ஆர்வலரான அவ் டாஸ் கௌஷல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் அங்கம் வகித்திருக்கும் நான், எனது பணிகளை விஸ்தரிக்கவும் இலங்கை அரசிடம் கோரவுள்ளேன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையாளர்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதிமறுக்கப்பட்டதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பாக வெளிப்படையான அணுகுமுறை இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## யாழ்தேவியை பார்க்க ஓடிய சிறுமியை தீண்டியது பாம்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி ரயில் வெள்ளோட்டத்தைப் பார்க்க ஓடிய சிறுமியை விஷப் பாம்பு தீண்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த மகிந்தன் பதுமிகா (வயது - 7) என்ற சிறுமியே இவ்வாறு பாம்புக் கடிக்கு உள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுமி யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுமி தனது பெற்றோருடன் நெல்விதைப்பு நடவடிக்கையைப் பார்வையிட வயலுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, வயலில் நின்ற சிறுமி பரீட்சார்த்த ரயில் வருவதைக் கண்டு அதனைப் பார்ப்பதற்காக வரம்பு வழியே ஓடிய போது அதில் படுத்திருந்த புடையன் பாம்பு அவரது காலில் தீண்டியுள்ளது.

## கிறிஸ்தவர்களுக்கு எதிராக சிங்கள ராவய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கிறிஸ்தவ மதத்தவர்களுக்கு எதிராக "சிங்கள ராவய" வினர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்றுப் பகல் ஈடுபட்டனர்.

களுத்துறை கதுகுருந்த சந்தியில் வீதியோரமாக கிறிஸ்தவ மதம் சார்ந்த சிலை ஒன்றை அமைப்பதற்கு எதிராகவே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதன்போது பெருமளவிலான மக்கள் சிங்கள ராவயவினருக்கு ஆதரவாக ஒன்றிணைந்து குரல் கொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அப்பகுதியில் சிலை வைப்பதற்கான சகல உரிமைகளும் தமக்கு இருக்கின்றன என்றும் சிலையை அமைப்பது என்பதில் தாம் உறுதியாக உள்ளனர் என்றும் கிறிஸ்தவ மதக் குழுவினர் கூறினர்.

## ஊவா வெற்றியின் மூலம் அபிவிருத்தியின் வேகம் கூடும்


### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபையில் மக்கள் எமக்கு பெற்றுத்தந்த வெற்றி என்பது நாம் இந்த நாட்டுக்கு பெற்றுக்கொடுத்த அமைதி, அபிவிருத்தி, பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றுக்கான மக்கள் ஆணை. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. ஊவா மாகாண வெற்றி குறித்து அவர் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு, நாம் தேர்தலில் வெற்றி பெற்றதன் விளைவாக நாட்டின் அபிவிருத்தியை மேலும் வேகப்படுத்த முடியும். ஊவா தேர்தலின்போது அரசுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை சிலர் முன்வைத்தனர். ஆனால் எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்து மக்கள் எங்களுக்கு ஆணை வழங்கியுள்ளனர். நாட்டின் தேசிய நலனுக்கு எதிராகச் செல்ல எவரையும் அனுமதிக்க முடியாது. மக்களும் இன்று அதையே விரும்புகின்றனர். ஊவா தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையைப் பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும் என்றார்.

## அமைச்சர் ஏக்கநாயக்கவின் சப்பாத்தை வாங்க முன்வந்த பிரிட்டன் நிறுவனம்



(கொழும்பு)

என்னுடைய சப்பாத்து ஜோடியை, இங்கிலாந்திலுள்ள நிறுவனமொன்று 1,000 மில்லியன் டொலர்களுக்கு (13,200 கோடி ரூபா) கேட்கிறது. இது தொடர்பில், இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் எனக்கு அறிவித்தது.

இருப்பினும் அவற்றை கொடுப்பதா, இல்லையா என்று நான் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

இந்த சப்பாத்தை ஏலத்தில் விட்டால், நல்லதொரு வருமானத்தை ஈட்டலாம் என்று கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த சப்பாத்து ஜோடி உலகப் பிரபலம் பெற்றுள்ளது.

அடிகள் கழன்றுள்ள இந்த சப்பாத்தை அணிந்தே, கடந்த சில தினங்களுக்கு முன், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சீன ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர் சென்று அமர்ந்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர்,

என்னுடைய சப்பாத்து ஜோடி மிகவும் பழையது. சீன ஜனாதிபதியை சந்திக்கும் போது நான் அணிந்திருந்த வெள்ளை நிற ஆடைக்கு ஏற்ற வகையில் இந்த வெள்ளை நிற சப்பாத்து ஜோடியை அணிந்து சென்றேன்.

இவற்றை நான் நீண்ட காலமாக அணிந்திருக்கவில்லை. சீன ஜனாதிபதி வந்த போதே அணிந்தேன். அதனால், அவற்றின் அடிகள் கழன்றிருப்பதை நான் அறிந்திருக்கவில்லை.

இதனால், அவற்றை அணிந்து சென்றேன். போகும் வழியில் அடிகள் கழன்றுவிட்டன. இருப்பினும் சப்பாத்தை மாற்றிக் கொண்டு செல்வதற்கான நேரம் போதாமையால் அப்படியே சென்றுவிட்டேன் என்றார்.

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புது வியூகத்துடன் ஐ.தே.க. களத்தில்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது புது வியூகங்களுடன் களமிறங்க ஐ.தே.க. திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கப்படவுள்ள சஜித் பிரேமதாஸவின் பொறுப்பில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட பிரசாரக் குழுவொன்றை கொண்டு தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஐ.தே.க.வின் மீது சர்வ மதத்தவர்களும் நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் சகல சமயங்களினதும் முக்கிய தலைவர்களை கவர்ந்திழுக்கும் செயற்திட்டம் கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அனைத்து இன மக்களினதும் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகளை அந்தந்த மதத்தலைவர்களின் ஊடாகவே முன்னெடுக்க ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

அரசாங்கத் தரப்பில் இருந்து வரும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் நடவடிக்கைகளில் மங்கள சமரவீர ஈடுபடுத்தப்படவுள்ளார்.

நாளாந்தம் செய்தியாளர்களை சந்தித்து, கட்சியின் ஊடக நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவருடைய பணியாகும்.

இன்னும் சில முக்கிய தலைவர்கள் ஏனைய கட்சிகளின் முக்கியஸ்தர்களை ஐ.தே.க.வுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் வாக்குச் சாவடிகள் தோறும் ஆளுங் கட்சியினரின் வன்முறைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இளைஞர் படையொன்றை ஏற்படுத்தவும் ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## கைக்குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை தாவளிப் பகுதியில் கட்டடம் அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டியபோது அதிலிருந்து ஐந்து கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள தனியார் காணியில் நேற்று அத்திவாரம் வெட்டியபோது கைக்குண்டுகள் காணப்பட்டன என்று தமக்குக் தகவல் கிடைத்தது என்றும், இதையடுத்து இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினருடன் சென்று அந்த கைக்குண்டுகளைத் தாம் மீட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## எரிபொருள் மானியத்திற்கு பதில் கடற்றொழில் உபகரணங்கள்

(கொழும்பு)



எரிபொருட்களுக்கான விலைக்குறைப்பை அடுத்து மீனவர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த எரிபொருள் மானியக் கொடுப்பனவு நிறுத்தப்படுவதுடன் அதற்குப் பதிலாக மீனவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் எரிபொருட்களின் விலைகளை குறைக்குமாறு ஜனாதிபதியிடம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாக அவர் எரிபொருட்களுக்கான விலைகளை குறைத்துள்ளார். எனவே மீனவர்களுக்கு தற்போது எரிபொருள் மானியம் வழங்கப்படத் தேவையில்லை. அரசாங்கம் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகியவற்றுக்காக மாதாந்தம் 350 மில்லியன் ரூபாய் செலவிடுகின்றது.

எனினும் இந்த நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதனால் அது நிறுத்தப்பட்டது. இதற்குப் பதிலாக பட்ஜ்கள் பாதுகாப்பு அங்கிகள், மீன்பிடி வலைகள், இயந்திரங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் கடந்த வாரம் களுத்துறை மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.